REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper
மின்னிதழ்
2024 பெப்ரவரி 17 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
வருட. 92 இல. 42 | Saturday 17, February, 2024 | 10 பக்கங்கள் | 50/-

## டி.ஆர்.விஜேவர்தனவின் 138ஆவது ஜனன தின நிகழ்வு



லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபகர் அமரர் டி.ஆர்.விஜேவர்தனவின் 138ஆவது ஜனன தினத்தையொட்டி லேக்ஹவுஸ் நிறுவனத்தில் எதிர்வரும் 21ஆம் திகதியும் 22ஆம் திகதியும் விசேட சமய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. 06

### சுற்றறிக்கையில் கூறப்பட்டதன்படி

# மக்களின் நேரடி தெரிவுகளாகவே யாழ். மாவட்டத்தில் அபிவிருத்தி

### மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



**விவசாயத்துக்கான நீர், குடிநீர் பிரச்சினை தொடர்பில் தீர்க்கமான தீர்வை எட்டுவதற்கு அனைத்து தரப்பையும் உள்ளடக்கிய கூட்டத்தை கொழும்பில் நடத்தவும் முடிவு**



யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலகங்கள் ரீதியாக கிராமங்கள் தோறும் கூட்டங்கள் நடத்தப்பட்டு அங்கு வாழும் மக்களின் நேரடி தெரிவுகளாக முன்மொழிவுகள் திரட்டப்பட்டு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 06

### இஸ்ரேலின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி

## பலஸ்தீன அரசை அமைக்க இலங்கை ஆதரவளிக்கும்

### இஸ்ரேல் அமைச்சரிடம் ஜனாதிபதி தெரிவிப்பு



இஸ்ரேலின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி பலஸ்தீன அரசை அமைப்பதற்கு இலங்கை ஆதரவளிப்பதாக இஸ்ரேல் அமைச்சரிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இஸ்ரேலின் போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்பு அமைச்சர் பிரிகேடியர் ஜெனரல் 06

### இனிவரும் காலங்களில்

## யாழில் நடக்கும் இசை நிகழ்ச்சிகளுக்கு எனது நெறிப்படுத்தல்கள் இருக்கும்

### அமைச்சர் டக்ளஸ் திட்டவட்டமாக அறிவிப்பு

யாழ்ப்பாண நகரில் இனிவரும் காலங்களில் ஏற்பாடு செய்யப்படும் இசை நிகழ்ச்சிகள் தனது கண்காணிப்பின் கீழ் நெறிப்படுத்தப்படுமென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் ஏற்பட்ட குழப்பங்களுக்கு தமது நெறிப்படுத்தல்கள் இல்லாமையும் ஒரு காரணமெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இசை நிகழ்ச்சியில் ஏற்பட்ட குழப்பங்களுக்கு எங்களுடைய இளைஞர்களை பலரும் குறை கூறுகின்றனர். நிகழ்ச்சியில் இளைஞர்கள் சிலர் தாக்குதலுக்கு இலக்காகியதாகவும் அறிந்து கொண்டேன்.

நிகழ்ச்சி தொடர்பில் யாழ். மாநகர சபை மற்றும் யாழ்ப்பாண பொலிஸார் கூடிய கவனம் 06

### தமிழரசு கட்சி தேசிய மாநாட்டுக்கு தடை

## எனக்கு எந்த தொடர்பும் இல்லை; கட்சி விரும்பினால் ஆஜராக தயார்



**யாழ். விசேட நிருபர்**

இலங்கை தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு தடை கோரி நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளுக்கும் தனக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு தடை கோரி யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை மாவட்ட நீதிமன்றங்களில் தொடரப்பட்ட 06

## பெற்றோலிய களஞ்சிய முனைய 13 இலட்சம் தரவுகள் அழிப்பு

### CID ஊடாக சட்ட நடவடிக்கை



இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனைய நிறுவனத்தின் எரிபொருள் சேமிப்பு மற்றும் எரிபொருள் விநியோகத்துடன் தொடர்புடைய 13 இலட்சம் தரவுகள் அழிக்கப்பட்டுள்ளதாக, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நடத்தப்பட்ட தடயவியல் தணிக்கையில் அடையாளம் காணப்பட்ட ஆரம்பக்கட்ட தகவல்கள் நேற்று முன்தினம் (15) கிடைத்துள்ளதாகவும், அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தனது X (ருவிட்டர்) பக்கத்திலேயே அமைச்சர் இவ்வாறு 06



03 **தமிழரசு கட்சி புதிய தலைவர் சிறிதரனை அமைச்சர் ஜீவன் யாழில் சந்தித்தார்**

## இஸ்ரேலுக்கும் இலங்கைக்கும் இடையே நேரடி விமான சேவை

### அமைச்சர் நிமல் ஒப்பந்தத்தில் கைச்சாத்து; பலாலி–இந்தியாவுக்கிடையே மற்றுமொரு விமானம் ஏற்பாடு



இஸ்ரேலுக்கும் இலங்கைக்கும் இடையில் நேரடி விமான சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக ஒப்பந்தமொன்று நேற்று முன்தினம் (15) கைச்சாத்தானதாக, துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். 06

### ஐ.ம.சக்தியுடனான உடன்பாடு

## தேர்தல்களுக்கானது அல்ல; சமூக நீதிக்கான ஒப்பந்தமே

### த.மு.கூ. தலைவர் மனோ கணேசன்



"நாட்கூலி தொழிலாளர் என்ற நிலையிலிருந்து, நிலவுரிமை கொண்ட தொழில் முனைவோராக பெருந்தோட்ட மக்களை மாற்றுவோமென ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாச மீண்டும் பகிரங்கமாக அறிவித்து எம்முடன் உடன்பாட்டில் கைெயழுத்திட்டுள்ளார். 06



இலங்கைக்கான இந்திய புதிய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, மன்னார் மடு மாதா தேவாலயத்துக்கு நேற்றுமுன்தினம் (15) சென்று வழிபாட்டில் ஈடுபட்டார். இதன் பின்னர் மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட மீனவ சமாசங்களுக்கு குளிர்சாதனப் பெட்டிகள் வழங்கும் நிகழ்விலும் உயர்ஸ்தானிகர் கலந்துகொண்டார்.

## காங்கேசன்–நாகபட்டினம் கப்பல் சேவை விரைவில்

### இம்மாத இறுதிக்குள் ஆரம்பமாகும்



நாகபட்டினத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான கப்பல் சேவையை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

பெப்ரவரி மாத இறுதிக்குள் இச்சேவை ஆரம்பிக்கப்படுமெனவும், அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இதேவேளை தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் சேவை முயற்சி தொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர், இந்த ஆண்டு இறுதிக்குள் இதற்கு தீர்வு 06



06 குறைபாடுகளை நன்கு அறிவேன் **நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதே சிறந்தது**



03 **இந்திய கலப்பு மின்சார திட்டம்; இந்திய உயர்ஸ்தானிகர் ஆய்வு**

## 72 பலஸ்தீன பத்திரிகையாளர் உட்பட 2023 இல் 99 பத்திரிகையாளர்கள் பலி





உலக நாடுகளில் 2023ஆம் ஆண்டில் 99 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளதாகத் பத்திரிகையாளர் பாதுகாப்பதற்கான குழு தெரிவித்துள்ளது. இவர்களில் 72 பத்திரிகையாளர்கள் பலஸ்தீனர்களெனவும் அக்குழு தெரிவித்துள்ளது. காசாவில் இவ்வளவு பெருந்தொகையில் பத்திரிகையாளர்கள் கொலை 06

### எமது மக்களின் ஆத்ம பலத்துடன்

## கட்சிக்கு எதிரான சூழ்ச்சிகள், தடைகளை முறியடிப்போம்



**யாழ். விசேட நிருபர்**

"கட்சிக்கு எதிராக எந்தச் சூழ்ச்சிகளோ, தடைகளோ ஏற்படுத்தப்பட்டாலும் மக்களின் ஆத்ம பலத்துடன் அவற்றை முறியடிப்போம்" என, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகியிருந்த போதும், திருகோணமலை, யாழ். மாவட்ட 06

## முஸ்லிம் சமூகத்திடம் மன்னிப்பு கோரியுள்ளார் ஞானசார தேரர்



2016ஆம் ஆண்டு கூரலக ஆலயத்தில் தெரிவித்த கருத்துக்காக முஸ்லிம் சமூகத்திடம் பொதுபல சேனாவின் ஞானசாரதேரர் மன்னிப்பு கோரியுள்ளார்.

08 வருடங்களுக்கு முன்னர் தான் வெளியிட்ட சர்சைக்குரிய கருத்துக் காரணமாக மன உளைச்சலை ஏற்படுத்தியிருந்தால், அதற்காக முஸ்லிம் சமூகத்திடம் தான் மன்னிப்பு கோருவதாக கொழும்பு உயர் நீதிமன்றத்துக்கு ஞானசாரதேரர் தகவல் அனுப்பியுள்ளார். தனது நடவடிக்கைக்காக முஸ்லிம்களிடம் ஆழ்ந்த கவலை தெரிவிப்பதற்கு 06

### நெருக்கடியிலிருந்து நாடு மீண்டு வருகிறது

## IMF இன் திட்டம் தடம் புரண்டால் பொருளாதார ஆபத்து ஏற்படலாம்



சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை முன்னெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டால் பாரிய பொருளாதார ஆபத்து ஏற்படலாமென, இலங்கை மத்திய வங்கி தெரிவித்தது.

உலக பொருளாதார வீழ்ச்சி காரணமாக ஏற்றுமதிக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துக்கு மத்தியில் பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டு வருவதாகத் தெரிவித்த மத்திய வங்கி, சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் தடம் புரண்டால் பாரிய பொருளாதார ஆபத்து ஏற்படலாமெனவும் தெரிவித்தது. 06







அனுராதபுரம், மஹா கனதராவ குளத்தை நீராதாரமாக கொண்ட அனுராதபுரம் நீர்வழங்கல் வேலைத் திட்டத்தை கடந்த 15ஆம் திகதி மக்கள் பாவனைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையளித்தார். நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிதேயகி, வட. மத்திய மாகாண ஆளுநர் மஹீபால ஹேரத், பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.எம்.சந்திரசேன, துமிந்த திசாநாயக்க, இஷாக் ரஹுமான், எச்.நந்தசேன, வட. மத்திய மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் எஸ்.எம்.ரஞ்சித், முன்னாள் அமைச்சர் பீ.ஹரிசன், ஜப்பான் சர்வதே ஒத்துழைப்பு நிறுவனத்தின் தலைவர் டனகா அகிஹிகோ, அதன் இலங்கைக்கான தலைமை பிரதிநிதி யமடா டெடிசுயா, தேசிய நீர் வழங்கல் சபையின் தலைவர் நிஷாந்த ரணதுங்க உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# நகர்வலம்







பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகை சமேத முன்னைநாதர் ஆலயத்தின் வருடாந்த மாசி மாத பிரம்மோற்சவம் அண்மையில் கொடியேற்றத்துடன் இனிதே ஆரம்பமானது. இதன்போது பக்தர்கள் பலர் கலந்து கொண்டு முன்னைநாதர் சுவாமியின் அருளைப் பெற்றுக்கொண்டனர். (படங்கள்; உடப்பு குறூப் நிருபர்)

## வலம்புரி கவிதா வட்டத்தின் 97 ஆவது கவியரங்கு இம்மாதம்

வலம்புரி கவிதா வட்டத்தின் 97 ஆவது கவியரங்கம் இம்மாதம் 23 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெறும்.

கவிஞர் இளநெஞ்சன் முர்ஷிதீன் கவியரங்கினைத் தலைமையேற்று நடாத்துகிறார்.



நான்கு நிமிடங்களுக்கு உட்பட்ட கவிதை பாட விரும்புவோர் நஜ்முல் ஹுசைன் (தலைவர்) 074 143 8447 அல்லது இளநெஞ்சன் முர்ஷிதீன் (செயலாளர்) 077 738 8149 அல்லது ஈழகணேஷ் (பொருளாளர்) 071 756 3646 உடன் தொடர்பு கொள்ளவும்.



கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சமூக மேம்பாட்டுக்குழு நடாத்திய இலவச மருத்துவ முகாம் சங்கத்தின் துணைத்தலைவர் த. அரியரத்தினம் தலைமையில் சமூக மேம்பாட்டுக்குழு செயலாளர் மிதிலைச்செல்வி ஸ்ரீ பத்மநாதன் தலைமையில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னணி வைத்திய கலாநிதிகளான லோகநாதன், பந்தன், சாந்தினி, ஆகியோர் கலந்துகொண்டனர்.

## குடும்பத் தகராறில் இளம் மனைவி கொலை!

மிகிந்தலை பிரதேசத்தில் கணவன் தனது மனைவியை கொலை செய்த சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

23 வயதுடைய இளம் மனைவி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் இரவு குடும்ப தகராறு காரணமாக கணவன் மனைவியை ஆயுதமொன்றால் தாக்கி கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மிஹிந்தலை, கெலே திரப்பனய, இஹலகம பிரதேசத்திலுள்ள வீடொன்றில் வைத்து இக்கொலை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொலைச் சம்பவம் தொடர்பில் பெண்ணின் 32 வயதுடைய கணவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மிஹிந்தலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கொழும்பு வெல்லவாய பிரதான வீதியில் போக்குவரத்து தடை

பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாக கொழும்பு - வெல்லவாய பிரதான வீதி முற்றாக தடைப்பட்டுள்ளது.

வெல்லவாய வெஹெரயாய பிரதேசத்தில் நிலவும் காட்டு யானைகளின் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு கோரி வெல்லவாய தனமல்வில பிரதான வீதி வெல்லவாய வெஹெரயாய பிரதேசத்தில் முற்றாக மறிக்கப்பட்டு எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக தெரியவருகின்றது. இதனால் பல கிலோமீற்றர் தூரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### சுகாதார அமைச்சர் மட்டக்களப்பு விஜயம்...

## சுகாதாரத்துறை பிரச்சினைகள் தொடர்பில் விசேட கவனம்

**(பெரியபோரதீவு தினகரன், கல்லடி குறூப் நிருபர்கள்)**



'முழுமையான சிகிச்சை முறை' எனும் தலைப்பில் கிழக்கு மாகாண மட்டத்தில் சுகாதார துறைசார்ந்து நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பிலுள்ள கிழக்கு மாகாண சுகாதார பயிற்சி நிலையத்தில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டீ.ஜீ.எம்.கொஸ்தாவின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலந்துரையாடலில் சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ரமேஷ் பத்திரன தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான பைசல் காசீம், இரா.சாணக்கியன், அமைச்சுக்களின் செயலாளர்கள், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க ஜஸ்டினா முரளிதரன், கிழக்கு மாகாணத்தின் பிராந்திய சுகாதார பணிப்பாளர்கள், திணைக்களம் சார் உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

கிழக்கு மாகாணத்திலுள்ள நான்கு பிராந்திய சுகாதார பணிமனைகளின் கீழுள்ள வைத்தியசாலைகளில் நிலவும் சுகாதாரத்துறை சார் பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது அமைச்சருக்கு சுகாதார துறை சார் அதிகாரிகளினால் விளக்கமளிக்கப்பட்டது. மிக முக்கிய பிரச்சினைகளாக காணப்படும் ஒசுசல, தீவிர சிகிச்சைப்பிரிவு இன்மை, ஆளணி பற்றாக்குறை, வாகன பற்றாக்குறை, பின்தங்கிய கிராமங்களில் காணப்படும் வைத்தியசாலைகளை மேம்படுத்துவதன் அவசியம் மற்றும் பழமை வாய்ந்த வாழைச்சேனை வைத்தியசாலையை தரமுயர்த்துவது தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது. குறைகளை கேட்டறிந்துகொண்ட அமைச்சர் அவற்றுக்கான தீர்வுகளை தாம் மிக விரைவில் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்.



மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மாசி மகோற்சவத்தின் நேற்றைய திருவிழாவில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் கலந்து சிறப்பித்தார். படத்தில் தலைவர் விக்னேஸ்வரா சர்வானந்தா, செயலாளர் செல்லையா ஜெயராஜ், பொருளாளர் பெரியசாமி மனோகரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எஸ். சிவஞானம் மற்றும் ஆலய அடியார் புண்ணிய சீலன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

## மண்முனை வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**

மண்முனை வடக்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் பிரதேச செயலகத்தில் வர்த்தக இராஜாங்க அமைச்சரும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான பாராளுமன்ற உறுப்பினர் ச.வியாழேந்திரன் தலைமையில் பிரதேசசெயலாளர் வ.வாசுதேவன் ஒழுங்கமைப்பின் கீழ் நடைபெற்றது. பிரதேச செயலாளரின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகிய ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் பிரத்தியேக செயலாளர் பூ.பிரசாந்தன் மற்றும் பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட அரச, அரசசார்பற்ற திணைக்களங்களின் தலைவர்கள், சமூக மட்ட பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர். ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பிரதேச செயலக பிரிவில் தற்போது நடைபெறுகின்ற அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பான முன்னேற்றங்கள் குறித்து ஆராயப்பட்டதுடன் எதிர்கால அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பான முன்னேற்பாடுகளும் பரிந்துரைக்கப்பட்டன.

மேலும் பிரதேச மட்டத்திலான திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் பிரச்சினைகளும் இனங்காணப்பட்டு அதற்கான தீர்வுகளும் முன்மொழியப்பட்டன.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 பெப்ரவரி 17 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 05.11
ளுஹர் - 12.26
அஸர் - 03.47
மஃரிப் - 06.22
இஷா - 07.33

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் மாசி 05
ராகுகாலம் : பகல் : 9.33 - 11.03 வரை
சுபநேரம் : காலை : 3.33 - 05.03 வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# அரசாங்கத் துறையின் திறனை கட்டியெழுப்ப இலங்கை – இந்திய கூட்டாண்மை பேச்சு

## உடன்படிக்கைக்கு இரு தரப்பும் இணக்கம்



இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நிர்வாக மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையை விரைவில் உருவாக்க இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர். நாட்டின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தும் வகையில், இலங்கையின் அரச துறையின் திறனை கட்டியெழுப்ப இந்திய இலங்கை கூட்டாண்மை வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படியே இக்குழுவினர் இந்திய அதிகாரிகளை சந்தித்து பேசியுள்ளனர்.

இந்திய அரசாங்கத்தின் நிர்வாக சீர்திருத்தம் மற்றும் பொதுமக்கள் குறை தீர்ப்புத்துறைச் செயலாளர் வி.ஸ்ரீனிவாஸ் மற்றும் பிரதமரின் செயலாளர் அநுர திஸாநாயக்க தலைமையில் நிர்வாக மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கு இடையிலான ஒத்துழைப்புத் தொடர்பாக இரு தரப்பு பிரதிநிதிகள் மட்டக் கலந்துரையாடல் நேற்று புதுடில்லியில் நடைபெற்றது. இலங்கையின் சிரேஷ்ட மற்றும் நடுத்தர மட்டங்களைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டங்களை நல்லாட்சிக்கான தேசிய மையத்தின் (NCGG) உதவியுடன் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்துக்கும் நல்லாட்சிக்கான தேசிய மையத்துக்கும் இடையில் முன்மொழியப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வழிமுறைகள் தொடர்பாக இரு தரப்பினரும் கலந்துரையாடினர்.

இதன்போது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் (SLIDA) பணிப்பாளர், அடுத்த ஐந்தாண்டுகளில் இலங்கை அதிகாரிகளுக்கான திறன்விருத்தி செயற்றிட்டம், பயிற்சி திட்டங்களை மேம்படுத்தல் மற்றும் ஒத்துழைப்பு, பல்வேறு உயர் மட்டங்களில் 1,000 அதிகாரிகளுக்கு கலப்பு முறையில் பயிற்சிகளை நடத்தல் ஆகிய விடயங்களை முன்வைத்தார்.

மேலும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட இந்திய அதிகாரிகள், நிர்வாக மறுசீரமைப்பில் தமது முக்கிய வகிபாகம், பொது நிர்வாகத்துக்கான பிரதமர் விருது திட்டத்தில் தகுதி அடிப்படையில் அங்கீகரித்தல், CPGRAMS இல் AI/ML ஐ பயன்படுத்துவதால் பொது குறைகளை திறம்பட நிவர்த்தி செய்வதன் மூலம் அக்குறைகளை கையாளுதல், ஒன்றிணைந்த சேவைத் தளங்கள், அவசியமான இசேவை மற்றும் இலத்திரனியல் கட்டமைப்பினதும் அவற்றின் பெறுபேறுகளினதும் வலுவாக்கல் போன்றவை மூலம் சேவை வழங்கலை மேம்படுத்தல் ஆகிய விடயங்களை முன்வைத்தனர்.

இலங்கையை சேர்ந்த பிரதிநிதிகள் குழுவில் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் கலாநிதி தர்மஸ்ரீ குமாரதுங்க, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவக (SLIDA) பணிப்பாளர் நாயகம் நாலக களுவெவே ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, இந்திய அரசாங்கத்தின் நிர்வாக சீர்திருத்தம் மற்றும் பொதுமக்கள் குறை தீர்ப்புத்துறையின் சிரேஷ்ட அதிகாரிகள், என். பி.எஸ்.ராஜ்புத், புனித் யாதவ், ஜெயா துபே ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தவக்கால சிந்தனை



## சீடராவதற்கு ஏற்ற காலம்

இயேசு செய்த பல விடயங்கள் வேறுபட்டதாகவும், வியக்கத் தக்கவையாகவும் இருந்தன. அவை பலருக்கு வருத்தத்தை கொணர்ந்தன. அவ்வாறான சம்பவங்களில் ஒன்றே இன்றைய நற்செய்தியாகும்.

இயேசு லேவியை தமது திருத்தூதராக தெரிவு செய்கிறார். கப்பர்நாகூமில் லேவியே இயேசுவுக்கு தேவையான கடைசி மனிதராக அவர்கள் எண்ணியிருக்கலாம். ஆனாலும் இயேசு அவரை தேர்ந்தெடுத்தார்.

லேவி என்பவர் காற்று வீசும் ஏரியில் நீண்ட குளிர்ந்த இரவுகளை கழித்த மீனவர்களாகிய பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் போன்ற கடின உழைப்பாளி அல்ல. அவர் சுங்கத்துறையில் அமர்ந்திருந்து துறைமுகத்துக்கு வரும் படகுகளுக்கு விரைந்து அவை கொண்டுவரும் பொருட்களை கணக்கெடுத்து அவற்றுக்கு வரி அறவிட்டு, அவற்றில் ஒருபகுதியை உரோமானிய படைகளுக்கும் மற்றப் பகுதியை தனது வருவாயாகவும் மாற்றிக்கொள்பவர்.

தமக்கான கட்டணத்துக்காக அதிக வரி வசூலிப்பது இவர்களின் தவிர்க்க முடியாத வழக்கமாகும். அடுத்தவர்களின் கேள்வியானது, மன்னிப்பை பற்றி எதிரிகளை அன்பு செய்வது பற்றி, தேவையில் உள்ளவர்களுடன் பகிர்ந்துகொள்வது பற்றி, நற்செய்தி அறிவிப்பது பற்றி, நோயாளர்களை குணப்படுத்துவது பற்றி லேவிக்கு என்ன தெரியும்? அவனுக்கு ஒன்றுமே தெரியாது என்று பதிலளித்தார்கள்.

ஆயினும் இயேசு அவனது அறியாமை மற்றும் பொதிகளுடன் அவனை தேர்ந்தெடுத்தார்.

இப்போதும் அதே நமது அறியாமை மற்றும் பொதிகளுடன் இயேசு நம்மை தேர்ந்தெடுக்கின்றார். ஏனென்றால் அவர் நம்மை அன்பு செய்கிறார்.

நம்மை நம்புகிறார். நாம் எப்போதும் மாற முடியுமென அவர் நம்புகிறார். அவரது அருளால் நாம் கற்று வளர முடியுமென அவர் நம்புகிறார்.

இந்தத் தவக்காலம் நாம் இயேசுவின் உண்மையான சீடர்களாக மாறுவதற்கான சரியான நேரமாகும். மற்றவர்களிடமிருந்து நாம் பெற்றுச் செயல்படும் நமது சுங்கச்சாவடியினை விட்டு விட்டு நம்மிடம் உள்ளவற்றை அடுத்தவர்களுக்கு கொடுக்க, அதிலும் குறிப்பாக தேவையிலுள்ளவர்களுக்கு கொடுக்க கற்றுக்கொள்வோம்.

அருட்தந்தை நவாஜி...

# தமிழரசு கட்சி புதிய தலைவர் சிறிதரனை அமைச்சர் ஜீவன் யாழில் சந்தித்தார்

(யாழ். விசேட நிருபர்)



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக தெரிவாகியுள்ள சிவஞானம் சிறிதரனை நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் நேற்று (16) சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள எஸ். சிறிதரன் எம்.பி.யின் இல்லத்தில் மரியாதை நிமித்தம் இந்தச் சந்திப்பு நடைபெற்றதுடன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக தெரிவாகியுள்ள சிறிதரனுக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். நீர்வழங்கல் நடவடிக்கையின் போது யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் அவர்கள் இருவரும் கவனம் செலுத்தினர்.

# இந்திய கலப்பு மின்சார திட்டம்; இந்திய உயர்ஸ்தானிகர் ஆய்வு

(யாழ். விசேட நிருபர்)



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா நேற்று இந்திய திட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ளகலப்புமின்திட்டஇடங்களை நேரில் சென்று பார்வையிட்டு ஆராய்ந்தார்.

நேற்று (16) நயினாதீவுக்கு சென்று நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயில், நயினாதீவு நாக விகாரையில் அவர் வழிபாட்டில் ஈடுபட்டதுடன், காங்கேசன்துறை துறைமுகம், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கு சென்ற உயர்ஸ்தானிகர் அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்தார்.

# 11 புராதன பௌத்த தலங்கள் புனித பூமி பிரதேசமாக அறிவிப்பு



தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் அரச வர்த்தமானியின் ஊடாக தொல்லியல் சிறப்புமிக்க 11 வழிப்பாட்டுத் தலங்கள் புனித பூமியாக பெயரிடப்பட்டுள்ளன.

அந்தப் பகுதிகளை புனித பூமியாக பெயரிடுவதற்கான சன்னஸ் பத்திரங்களை வழங்கும் நிகழ்வு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையில் நேற்று முன்தினம் (15) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

அதற்கமைய அனுராதபுரம் ஹொரவ்பொத்தான பிரதேச செயலக பிரிவின் அம்பகஸ்வெவ புராதன விகாரை, புத்தளம் தங்கொட்டுவ பிரதேச செயலக பிரிவின் பொதுவடன புராதன விகாரை, அம்பாறை பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முஹுது மகா விகாரை, கம்பஹா மாவட்டத்தின் தொம்பே பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான மெத்தேகம விகாரை, ஹம்பாந்தோட்டை உத்தகந்தர விகாரை, திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலகத்தின் ஸ்ரீ சத்தர்ம யுக்திக ஆசிரமம், குருணாகல் நாரம்மல பிரதேச செயலகத்தின் தம்பதெனிய விஜய சுந்தராராம விகாரை, குச்சவெளி பிரதேச செயலகத்தின் சாந்தி விகாரை, குருணாகல் குளியாபிட்டி மேற்கு பிரதேச செயலகத்தின் ஸ்ரீ சுதர்மாராம புராதன விகாரை, கம்பஹா சித்த கபலே மல் சூனியம் தேவாலய, குச்சவெளி பிரதேச செயலகத்தின் யான் ஓயா விகாரை, சாகரபுர சுமுதுகிரி வன ஆசிரமம் உள்ளிட்ட தலங்களே புனித பூமிகளாக பெயரிடப்பட்டிருக்கின்றன.

அதற்கமைய தற்போது வரையில் நாட்டின் 142 வழிபாட்டுத் தலங்கள் புனித பூமிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்போது புத்த சாசனத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அரசிலமைப்புக்கு அமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அர்ப்பணிப்புடன் செயற்படுவாரென ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் அரசாங்கம் புத்த சாசனத்தின் மேம்பாட்டிற்காக முன்னெடுத்துவரும் முயற்சிகள் குறித்து தெளிவூட்டிய ஜனாதிபதியின் செயலாளர், தேரவாத பௌத்த மத்தியஸ்தானமான மகா விகாரையின் ஆய்வுப் பணிகளை ஆரம்பிக்கவும், மகா விகாரை பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்கவும், கண்டி சர்வதேச பௌத்த அருங்காட்சியகத்தை நிர்மாணிப்பதற்கு அவசியமான திட்டங்களை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.



நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்காக மாத்திரமின்றி, தத்தமது குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் சமூக வளர்ச்சிக்கும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பங்களிப்புச் செய்து வெற்றி பெற்ற மகளிரை அங்கீகரிக்கும் 'ஃப்ரீடா கொரெயா விருது விழா (2023) காமினி கொரெயா அறக்கட்டளை நிலையத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (15) பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வாறு பல சவால்களை எதிர்கொண்டு வெற்றி பெற்ற மகளிர் தொடர்பாக கட்டுரைகளை எழுதிய லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தினகரன் பத்திரிகை ஊடகவியலாளர் வயலட் ராஜகனி, தினமின பத்திரிகை ஊடகவியலாளர்களான நதீகா தில்ஹானி டயஸ், நெத்மி பூஜனி ரத்நாயக்க, சிலுமின பத்திரிகை ஊடகவியலாளர் இனோக்கா பெரேரா பண்டார ஆகியோர் இதன்போது விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## சென்னை இலங்கை துணைத்தூதரகம்

# ஆவணங்களை வழங்கினால் மட்டுமே முருகனை இலங்கைக்கு அனுப்பலாம்

## இந்திய மத்திய அரசு தெரிவிப்பு

(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)

இலங்கை துணைத்தூதரகம் ஆவணங்களை வழங்கினால் மாத்திரமே முருகனை இலங்கைக்கு திருப்பி அனுப்ப முடியுமென, மத்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளான பேரறிவாளன், முருகன், சாந்தன், ராபர்ட்பயஸ், ஜெயக்குமார் உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்து, கடந்த வருடம் நவம்பர் மாதம் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இவர்களில் இலங்கையைச் சேர்ந்த சாந்தன், முருகன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் திருச்சி மத்திய சிறை வளாகத்திலுள்ள சிறப்பு முகாமில் அடைக்கப்பட்ட போது, இவர்கள் தம்மை முகாமிலிருந்து விடுதலை செய்யக் கோரி தொடர்ச்சியாக வலியுறுத்தினர்.

சாந்தன் தன்னை இலங்கைக்கு அனுப்பக் கோரி நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார். இந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, சாந்தனை இலங்கைக்கு அனுப்ப விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமென, மத்திய மாநில அரசாங்கங்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் முருகனும், சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்தார். லண்டனில் வசிக்கும் தனது மகளுடன் சேர்ந்து வாழ விரும்புவதாகவும் அதற்காக கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ள திருச்சி சிறப்பு முகாமிலிருந்து சென்னையிலுள்ள இலங்கை துணைத்தூதரகத்துக்கு அழைத்துச் செல்லுமாறும் மனுவில் கோரினார்.

இதன்போது மத்திய அரசாங்கத் தரப்பில், முருகனை லண்டனுக்கு அனுப்ப முடியாதெனவும் இலங்கை துணைத்தூதரகம் ஆவணங்களை வழங்கினால் மாத்திரம் இவரை இலங்கைக்கு திருப்பி அனுப்ப முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பயண ஆவணம் வழங்குவதற்கான நேர்காணலுக்கு முருகனை இலங்கை துணைத்தூதரகம் அழைக்கும் போது, இவருக்கு உரிய பாதுகாப்பு வழங்க நீதிபதி உத்தரவிட்டார்.

இன்னும் ஓரிரு தினங்களில் முருகன் திருச்சி சிறப்பு முகாமிலிருந்து பலத்த பாதுகாப்புடன் இலங்கை துணைத் தூதரகத்துக்கு அழைத்து செல்லப்படுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. இதேபோல் முகாமிலுள்ள ராபர்ட்பயஸ், ஜெயக்குமார் ஆகியோரையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, சிறப்பு முகாம் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வங்கிகளில் கடன் பெறும் பண மோசடி

# சமூக ஊடகங்களில் பெற்ற படங்களை பயன்படுத்தி போலி ஆவணம் தயாரிப்பு

சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட புகைப்படங்களை பயன்படுத்தி போலி தேசிய அடையாள அட்டை தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட 02 சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சந்தேகநபர்களிடமிருந்து 28 போலி தேசிய அடையாள அட்டைகள், 32 போலி சாரதி அனுமதிப்பத்திரங்கள், 03 கையடக்கத் தொலைபேசிகள், 05 போலி தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்கள், 18 சிம் கார்ட்கள் மற்றும் கணினி ஆகியவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இச்சந்தேகநபர்கள், தனியார் வங்கிக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கும் போலித் தகவல்களை பயன்படுத்தி கடன் பெறுவதற்கும் போலி ஆவணங்களை தயாரித்தமையை கண்டுபிடித்துள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார். பொதுமக்களை சந்தேகநபர்கள் ஏமாற்றி, போலி ஆவணங்களை பயன்படுத்தி திறக்கப்பட்ட வங்கிக் கணக்குகளில் பணத்தை வைப்புச் செய்துள்ளனர். போலி தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் போன்ற பிற ஆவணங்களை தயாரிக்க அவர்கள் சமூக ஊடகங்களிலிருந்து தகவல் மற்றும் படங்களை பெற்றுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மாசி மாதம் 04ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷஃபான் பிறை 06

## குறள் தரும் சிந்தனை



ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்த தில்

தாகம் கொண்டு தவிக்கும் பசுவுக்காகத் தண்ணீர் வேண்டுமென இரந்து கேட்டாலும்கூட, அப்படிக் கேட்கும் நாவுக்கு, அதைவிட இழிவானது வேறொன்றுமில்லை.

# போதைப்பொருளை ஒழிப்பதற்கான விழிப்புணர்வை அதிகரிப்பது அவசியம்

நாட்டில் போதைப்பொருள் குற்றங்கள் தற்போது பெருமளவில் குறைந்துள்ளன. பொலிசார் தற்போது முன்னெடுத்து வருகின்ற 'யுக்திய' நடவடிக்கை காரணமாகவே போதைப்பொருள் குற்றங்கள் பெருமளவில் குறைந்திருப்பதாக பரவலாக செய்திகள் வெளிவருகின்றன.

போதைப்பொருளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு பொலிசார் ஆரம்பித்துள்ள 'யுக்திய' என்ற விசேட நடவடிக்கை தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாறான தீவிர நடவடிக்கை மூலமே நாட்டில் போதைப்பொருள் குற்றங்களை முடிவுக்குக் கொண்டுவர முடியுமென்பது மக்களின் நம்பிக்கையாகும்.

உலகெங்கும் இன்றைய சமுதாயம் எதிர்நோக்கியுள்ள மிகப்பெரிய சவால்களில் ஒன்றாக போதைப்பொருள் பாவனை விளங்குகின்றது. பொழுதுபோக்குக்காகவும், சிறிது நேரம் கிடைக்கும் அற்ப சந்தோசத்துக்காகவும் பயன்படுத்தப்படும் இந்த போதைப்பொருட்கள் உடல் நலத்திற்கு கேடு விளைவித்து இறுதியில் வாழ்வையே சீரழித்து விடுகின்றன. போதைப்பொருள் பாவனையானது இறுதியில் மரணத்துக்கே வழிவகுக்கின்றது.

ஒரு நாட்டின் அபிவிருத்தி என்பன அந்நாட்டில் சுகதேகிகளாக வாழும் மக்களிலேயே தங்கியுள்ளது. அதிலும் நாட்டின் எதிர்காலத்தையும் தலைவிதியையும் தீர்மானிப்பவர்களாக இளம்தலைமுறையினரே காணப்படுகின்றனர். இந்நிலையில்,தெற்காசிய வலயத்தில் பல தொன்மையான வரலாறுகளையும், சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்ற இலங்கையிலும் போதைப்பொருள் படிப்படியாக ஊடுருவியுள்ளது.

இலங்கையில் இருந்து போதைப்பொருளை ஒழித்துக் கட்டுவதற்கு பல்வேறான முயற்சிகள் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட போதிலும், போதைப்பொருள் குற்றங்களை நாட்டிலிருந்து முற்றாக ஒழிப்பதென்பது பெரும் சவாலாகவே காணப்படுகின்றது. ஆனாலும் நாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற யுக்திய நடவடிக்கையானது பெரும் பலனைத் தந்துள்ளதாக செய்திகள் வெளிவருகின்றன.

போதைப்பொருள் பாவனை என்பது வெறும் சட்டப் பிரச்சினை என்று எவரும் கருதி விடலாகாது. அது சமூகப் பிரச்சினை ஆகும். அதாவது எமது சமூகத்தை படிப்படியாகச் சீரழிக்கின்ற பாரிய பிரச்சினை ஆகும்.

அத்துடன் போதைப்பொருளை சமூகத்திலிருந்து ஒழிப்பதென்பது குறித்ததொரு தரப்பினரது பொறுப்பு என்று ஏனையோர் ஒதுங்கி விட முடியாது. இவ்விடயத்தில் அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலமே போதைப்பொருள் அரக்கனை எமது சமூகத்திலிருந்து முற்றாக ஒழிக்க முடியுமென்பதை மறந்துவிட முடியாது.

ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள சமூகநல அமைப்புகள் போதைப்பொருள் அரக்கனுக்கு எதிராக போராடுவதற்கு முன்வர வேண்டும். அதன் ஊடாகவே சமூகமட்டத்தில் போதைப்பொருளுக்கு எதிராக போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். கிராமங்களிலுள்ள இளைஞர் அமைப்புகளுக்கு இவ்விடயத்தில் பெரும் பங்கு உள்ளதை மறந்துவிட முடியாது.

போதைப்பொருள் பாவனையின் தீமையை மதத் தலைவர்களும் தமது அன்றாட சமய நிகழ்வுகளில் நினைவூட்டல் வேண்டும். போதைப்பொருள் பாவனையிலிருந்து மக்களை மீட்பதற்கு மருத்துவ வசதிகளை மேம்படுத்தல் அவசியம். பெற்றோர் தம் பிள்ளைகளை பாதுகாப்பாக வளர்த்தல் அவசியம். தனியார் கல்வி நிலையங்கள் போன்றவற்றை சூழ ஏற்படும் நட்புச் சூழலையும், விளையாட்டு மைதானச் சூழலையும் பாதுகாப்பானதாக மாற்றிக் கொள்ளுதல் வேண்டும். பொது நிறுவனங்கள் போதைப்பொருள் பாவனைக்கு எதிராக விழிப்புணர்வு ஊட்டுவது அவசியமாகும்.

அதேசமயம் பெற்றோர் தங்களது பிள்ளைகளின் நடத்தைகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் குறித்து மிகவும் அவதானமாக இருத்தல் அவசியம். பிள்ளைகளின் அன்றாட நடவடிக்கைகளில் மாற்றங்கள் ஏற்படுவதை அவதானித்தால் பெற்றோர் உடனடியாகவே அவ்விடயத்தில் கவனம் செலுத்தத் தவறக் கூடாது.

இளவயதினரின் உடல் எடையில் திடீர் மாற்றங்கள் ஏற்படுதல், உடல் தோற்றங்களில் அக்கறை காட்டாத விதத்தில் அவர்கள் நடந்து கொள்ளுதல், வழமைக்கு மாற்றமான செயல் நடத்தைகள், காரணம் இல்லாமல் சிரித்தல், காரணம் இல்லாமல் பேசுதல் போன்ற நடவடிக்கைகள் தென்பட்டால் அவற்றை அலட்சியப்படுத்தக் கூடாது. எக்காரணமும் இன்றி தீவிரமாக உடல் வியர்த்தல், கண்களை வேகமாக அசைத்தல் அல்லது கண்கள் அரைவாசி மூடியது போன்று சிவந்து காணப்படுதல், வழமைக்கு மாற்றமாக உணவுகளில் விருப்பமின்றி நடத்தல் போன்றனவும் போதைப்பொருள் பாவனைக்கான அறிகுறிகளாக இருக்கக் கூடும்.

ஆரம்பப் பாடசாலை செல்லும் மாணவர்கள் முதல் உயர்தரம் கற்கும் மாணவர்கள் வரை அனைவரும் போதைப்பொருள் வியாபார விஷமிகளால் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளிவருகின்றன. போதைப்பொருள் என்று தெரியாமல் கூட பிள்ளைகளில் உடலுக்குள் அவை செல்வதற்கான ஆபத்துகள் இருக்கின்றன. எனவே பிள்ளைகள் விடயத்தில் பெற்றோர் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

போதைப்பொருள் இல்லாத நாட்டைக் கட்டியெழுப்ப மக்கள் ஒவ்வொருவருமே முழுமையான ஒத்துழைப்பு வழங்குவது அவசியம்.

editor.tkn@lakehouse.lk

# அழகு நிறைந்த வெளிநாட்டுப் பறவைகளை காண மன்னாருக்கு படையெடுக்கும் மக்கள்!





புலம்பெயர்ந்த பறவைகள் ஃபிளமிங்கோக்கள்(நாரை இனம்) இன்று இலங்கையின் மன்னார் பகுதியில் காணப்படுகின்றன. இங்கு உணவு கிடைப்பது, காலநிலை மற்றும் இனப்பெருக்க ஜோடிகளைத் தேர்ந்தெடுப்பது உள்ளிட்ட பல தேவைகளுக்காக இப்பறவைகள் வருடந்தோறும் தங்கள் நாட்டிலிருந்து இலங்கைக்கு இடம்பெயர்வது வழமையாகும்.

இந்த இடம்பெயர்ந்த பறவைகளுக்குள், மிகவும் அரிதான மற்றும் மிகவும் உணர்திறன் கொண்ட பறவை ஃபிளமிங்கோ ஆகும். தற்போது அவை பெருமளவில் மன்னாரில் குவிந்துள்ளன.



பறவைகள் புலம்பெயர்ந்த காலம் எப்போதுமே பார்வையாளர்களுக்கு ஒரு உற்சாகமான நேரமாக உள்ளது.அவர்கள் மன்னாரின் ஈரநிலங்களில் ஐந்து மாதங்களுக்கும் மேலாக செலவழிக்கும் அழகான மற்றும் கம்பீரமான ஃபிளமிங்கோக்களை ஓய்வு நேரத்தில் ரசித்துப் பார்க்கின்றனர். அவற்றை புகைப்படம் எடுக்கவும் வாய்ப்பைப் பெறுகிறார்கள். இந்த வகை பறவைகள் நவம்பர் மாதம் இலங்கைக்குப் பறந்து வந்து, பொதுவாக ஏப்ரல் வரை இங்கு தங்கியிருக்கும். அவை இலங்கைக்கு இடம்பெயர்வது மட்டுமன்றி, பாகிஸ்தான் மற்றும் இந்தியாவிற்கும் புலம்பெயர்கின்றன.

மன்னாரில் தற்போது சுமார் 3000 இற்கும் அதிகமான ஃபிளமிங்கோக்கள் வந்துசேர்ந்துள்ளன. "2012 இல் சுமார் 12,000 ஃபிளமிங்கோக்கள் இருந்தன, ஆனால் அது படிப்படியாகக் குறைந்தது, பின்னர் சென்ற வருடம் 3000 தொடக்கம் 5000 வரை காணப்பட்டது. இப்போது சுமார் 3,000 ஃபிளமிங்கோக்களாக உள்ளன.

இந்த ஃபிளமிங்கோக் பறவைகளை காண அதிமான வெளிநாட்டவர்கள் மன்னார் பகுதிக்கு வருகின்றனர்.

அல் முஹமட் றஷீன்...

# சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலய ஐம்பெரும் விழா

சாய்ந்தமருது அல்ஜலால் வித்தியாலயத்தின் ஐம்பெரு விழா அண்மையில் இடம்பெற்றது. கணிதப் பூங்கா திறத்தல், சிறுவர் பூங்கா திறத்தல், வைபவ ரீதியான உயர்தர கலைப்பிரிவு ஆரம்பித்தல், பாடசாலை உத்தியோகபூர்வ இணையத்தளம் ஆரம்பித்தல் மற்றும் க.பொ.த சாதாரண தரப்பரீட்சை (2022/2023) முடிவுகளின் அடிப்படையில் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களை கௌரவித்தல் என்பன ஐம்பெரும் விழாக்களில் இடம்பெற்றிருந்தன.

பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். சைபுதீன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்தார்.

அத்துடன் கௌரவ அதிதிகளாக கல்முனை கல்வி வலய நிருவாகத்துக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபிர், கல்வி அபிவிருத்திக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. பீ.ஜிஹானா ஆலிப், கணித பாடத்துக்கு பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளரும் காரைதீவுக் கோட்டத்துக்கான கோட்டக் கல்விப் பணிப்பாளருமான ஏ. சஞ்சீவன், கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தின் நிருவாக உத்தியோகத்தர் ஏ.எம். ஆரிப், பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் பொறியியலாளர் எம்.ஐ.எம். றியாஸ், அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளர் இஸ்ஸத் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள், பெற்றோர் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.







இந்நிகழ்வில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு கையில் காசு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாடசாலை விஞ்ஞான ஆய்வு கூட உத்தியோகத்தர் ஹாரூன் அவர்களால் பணப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எம்.ஐ.எம்.அஸ்ஹர்...
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# வடஇந்தியாவில் விவசாயிகள் போராட்டம்; இயல்புவாழ்வு பாதிப்பு!



இந்திய பொருளாதாரத்தின் முக்கிய தூணாக இருக்கும் விவசாயிகள் முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து வட இந்தியாவில் குறிப்பாக டெல்லி பஞ்சாப் பகுதிகளில் மாபெரும் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்தப் போராட்டம் மூலம் வட இந்தியாவில் இருந்து மத்திய மற்றும் தென் மாநிலங்களுக்கு வரும் சரக்குகள் மற்றும் மூலப்பொருட்களின் போக்குவரத்துக்குப் பல நாட்களாகப் பாதிக்கப்பட்டு உள்ளதோடு, விநியோகச் சங்கிலியை சீர்குலைத்துள்ளது.

இந்தப் போராட்டத்தின் தாக்கத்தின் மூலம் விநியோக சங்கிலியில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அடுத்த ஒரு வாரம் இந்தப் போராட்டம் தொடர்ந்தால் கோதுமை, பருத்தி, அரிசி, சோளம், கரும்பு, கடலை முதல் பல பொருட்களின் விலை உயர வாய்ப்பு உள்ளது.

விநியோக சங்கிலி பாதிக்கப்படுவதைத் தொடர்ந்து, நாட்டின் வர்த்தகப் போக்கும் பாதிக்கப்படலாம் என்று அஞ்சப்படுகின்றது. குறிப்பாக டெல்லி மற்றும் அதைச் சுற்றியுள்ள பொருளாதார நடவடிக்கைகள் ஸ்தம்பிக்கலாம். தொழிற்சாலைகள் இயங்குவதற்கான முக்கியப் பொருட்களான இரும்பு மற்றும் உருக்கு போன்ற மூலப்பொருட்களின் பற்றாக்குறையும் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

டெல்லி பஞ்சாப் சுற்றி சுமார் 4000 கடைகள் மூடப்பட்டு உள்ளதாகவும் கூறப்படுகிறது. கடந்த 56 நாட்களாக, ஏராளமான விவசாயிகள் சங்கங்கள் போராட்டம் நடத்தி வரும் நிலையில், அவர்களின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்று குறைந்தபட்ச ஆதரவு விலையின் (MSP) சட்டரீதியான உத்தரவாதம் ஆகும்.

டெல்லி பொலிஸ் ஒரு மாதமாகத் தேசிய தலைநகர் முழுவதும் 144 தடை விதித்துள்ளது. விவசாயிகள் போராட்டம் காரணமாக ஹரியானா மற்றும் பஞ்சாம் மாநிலத்தில் எரிபொருள் விநியோகம் பாதிக்கப்பட்டு உள்ளது, குறிப்பாகப் பஞ்சாப் ஹரியானா எல்லைப் பகுதியில் போக்குவரத்து துண்டிப்பால் டீசல் விநியோகத்தில் 50 சதவீதமும், எரிவாயு விநியோகத்தில் 20 சதவீதமும் பாதிக்கப்பட உள்ளது.

இதேவேளையில் நாடு முழுவதும் உள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகள் அமைப்பு, மத்திய அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், நிறைவேற்றப்படாத கோரிக்கைகளை வலியுறுத்தியும் பாரத் பந்த் அதாவது நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர். காலை 6 மணிக்குத் தொடங்கிய போராட்டம் மாலை 4 மணி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டு உள்ள நிலையில் நாட்டின் பல இடங்களில் கணிசமான பாதிப்பு நேற்று ஏற்பட்டுள்ளது.

சில பகுதிகளில் மட்டுமே மக்களின் இயக்கம் பாதிக்கப்பட்டு உள்ளது. ஆந்திரா, தமிழ்நாடு மற்றும் கேரளாவில் பந்த் காரணமாக எந்தப் பாதிப்பும் இல்லை. கர்நாடகாவில் ஒரு பகுதி விவசாயிகள் நாடு தழுவிய போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கர்நாடக மாநிலத்தில் விவசாயிகள் போராட்டம் மாலை 4 மணி வரை தொடர்ந்தது. கிராமப்புறங்கள் மற்றும் கிராமங்களை ஒட்டிய பகுதிகளிலும் அனைத்து நடவடிக்கைகளை நிறுத்த அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நடத்திய இலவச மருத்துவமுகாம்



வைத்தியசாலை வசதிகளற்ற மற்றும் தூர இடங்களில் வைத்தியசாலைகள் அமைந்துள்ள பிரதேசங்களைச் சேர்ந்த சிரமமான பொருளாதார சூழ்நிலையில் வாழும் மக்களின் மருத்துவ தேவைகளை மக்களின் காலடிக்குச் சென்று தீர்த்து வைக்கும் வகையில் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட கிளை ஒழுங்கு செய்திருந்த இலவச மருத்துவ முகாம் கெருடமடு பிள்ளையார் கோயில் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட மணல்கந்தல், வசந்தபுரம் மற்றும் கெருடமடு கிராமத்தைச் சேர்ந்த மக்கள் இந்த மருத்துவ முகாமில் கலந்து கொண்டனர்.

மருத்துவம் சம்பந்தமான ஆலோசனைகள், உணவு பயன்பாடு, முதலுதவி, உடற் பரிசோதனைகள் மற்றும் மருத்துவ உதவிகளும் இப்பிரதேச மக்களுக்கு வழங்கப்பட்டன.




# சென்னையில் எதிர்வரும் மார்ச் மாதம் எடிசன் தமிழ் திரை விருதுவிழா

## சிறந்த நடிகர் யார்? ரசிகர்கள் வாக்களிப்பு

16ஆவது ஆண்டு எடிசன் திரை விருது நிகழ்வு எதிர்வரும் மார்ச் மாதம் சென்னையில் நடைபெற உள்ளது. அந்நிகழ்விற்கான தேர்வுப் பட்டியல் கடந்த ஆண்டு வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் திரைப்படங்களில் சிறந்த நடிகர் தேர்வுப் பட்டியலில் மாஸ் ஹீரோ வரிசையில் ரஜினிகாந்த், விஜய், அஜித், விஷால் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

சிறந்த நடிகருக்கான தேர்வுப் பட்டியல் வரிசையில் விக்ரம், தனுஷ், சிவகார்த்திகேயன், கார்த்தி, சிம்பு, ஜெயம் ரவி, ராகவா லோரன்ஸ், சித்தார்த் போன்றவர்களும் இடம் பெற்றுள்ளனர்.

மேலும் உலகத்தமிழர்கள் தங்களுக்கு பிடித்தமான நடிகர்களை தேர்ந்தெடுக்க வசதியாக எடிசன் அவார்ட்ஸ் செயலியில் மற்றும் www.edisonawards.in என்ற வலைதளம் மூலமாகவும் வாக்குகளை செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு நாடுகளில் உள்ள தமிழர்கள் அறியும் வகையில் தினசரி நாளேடு பண்பலை சமூக ஊடகங்கள் மூலமாகவும் விளம்பரம் செய்யப்பட்டு வாக்குகளை பெற்று வருவதாக எடிசன் விருது குழுத் தலைவர் செல்வகுமார் தெரிவித்தார்.

மேலும், தமிழ் ரசிகர்கள் தாங்கள் வாக்களித்த நடிகர், நடிகைகளை எடிசன் விருதில் ரெட் கார்பெட்டில் நடக்கும் நிகழ்வுகளை உலகத் தமிழர்கள் அறியும் விதத்தில் பல்வேறு நாடுகளில் உள்ள சமூக ஊடகங்கள் IPTVகள் மூலமாக காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் விபரங்களுக்கு +6016 6167708 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.





# துண்டுதுண்டாக உடைந்து சிதறுண்டு போனது பா.ஜ.கவை எதிர்த்து நின்ற 'இந்தியா' கூட்டணி!



இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேச சட்டசபைக்கு லோக்சபா தேர்தல் நடத்தப்பட்டால் 'தேசிய மாநாட்டுக் கட்சி' தனித்தே போட்டியிடும் என திட்டவட்டமாக தெரிவித்துள்ளார் 'இந்தியா' கூட்டணியில் இடம்பெற்றுள்ள தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவரான முன்னாள் முதல்வர் பரூக் அப்துல்லா.

மேலும் எதிர்காலத்தில் பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணையும் வாய்ப்புகளை மறுப்பதற்கும் இல்லை என்கிறார் பரூக் அப்துல்லா.

லோக்சபா தேர்தலுடன் ஆந்திரா, ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசம் உள்ளிட்ட சில மாநிலங்களுக்கும் சட்டசபை தேர்தல் நடைபெறக் கூடும் என்பது எதிர்பார்ப்பு ஆகும்.

லோக்சபா தேர்தலுக்கான பா.ஜ.கவுக்கு எதிரான 'இந்தியா' கூட்டணியில் ஜம்மு காஷ்மீரின் தேசிய மாநாட்டு கட்சி, மெகபூபா முப்தியின் மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியவையும் இடம் பெற்றுள்ளன.

ஆனால் 'இந்தியா கூட்டணி' என்ற ஒருமித்த எதிரணியை உருவாக்கிய நிதிஷ்குமாரே இந்த அணியை கைகழுவிவிட்டு பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு ஓடிவிட்டார். ஆம் ஆத்மி, திரிணாமுல் காங்கிரஸ் கட்சிகளும் லோக்சபா தேர்தலில் காங்கிரஸுடன் கூட்டணி சேராமல் தனித்தே போட்டியிடுவோம் என அறிவித்துவிட்டன. இந்தியா கூட்டணியில் இருந்த ராஷ்டிரிய லோக் தள் கட்சியும் பா.ஜ.க தலைமையிலான கூட்டணிக்குப் போய் விட்டது.


இதனால் 'இந்தியா கூட்டணி' என்ற அமைப்பு லோக்சபா தேர்தல் வரை நீடிக்குமா? என்கின்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இதனிடையே ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேச தலைநகர் ஸ்ரீநகரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவரும் முன்னாள் முதல்வருமான பரூக் அப்துல்லா செய்தியாளர்களை சந்தித்தார். இச்சந்திப்பின் போது கருத்துத் தெரிவித்த அவர், "லோக்சபா தேர்தலுடன் ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேச சட்டசபைக்கும் தேர்தல் நடைபெறக் கூடும். ஜம்மு காஷ்மீர் தேர்தலில் தேசிய மாநாட்டுக் கட்சி தனித்தே போட்டியிடும். அதில் எந்த ஒரு மாற்றமும் இல்லை" என திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

மேலும் 'இந்தியா' கூட்டணியின் காங்கிரஸுடனான தொகுதி பங்கீட்டுப் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்த காரணத்தால்தான் இம்முடிவை எடுத்தோம் என்றார் பரூக் அப்துல்லா.

அத்துடன் இந்தப் பேட்டியின் போதே, எதிர்காலத்தில் பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தேசிய மாநாட்டு கட்சி இடம்பெறக் கூடும் என்பதையும் சூசகமாக தெரிவித்தார் பரூக் அப்துல்லா. வாஜ்பாய் காலத்திலேயே தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பரூக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டு கட்சி இடம் பெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது.



## பா.ஜ.கவுடன் இணையத் தயாராகிறார் பரூக் அப்துல்லா! அண்ணா தி.மு.கவையும் மீண்டும் பா.ஜ.க அணிக்கு கொண்டுவருவதற்கு தீவிர முயற்சிகள்!

சபா எம்.பி பதவிக் காலம் எதிர்வரும் ஏப்ரலில் முடிவடைவதால் இந்தத் தேர்தல் நடைபெற உள்ளது.

ஒரிசா சட்டசபையில் மொத்தம் 147 எம்.எல்.ஏக்கள் உள்ளனர். ஆளும் பிஜூ ஜனதா தளத்துக்கு 111 எம்.எல்.ஏக்களும் பா.ஜ.கவுக்கு 22 எம்.எல்.ஏக்களும் உள்ளனர். காங்கிரஸ் 8, சி.பி.எம் 1 எம்.எல்.ஏக்கள் உள்ளனர்.

இந்த நிலையில் ஒரிசா ராஜ்யசபா தேர்தலில் பிஜூ ஜனதா தளத்தின் அஸ்வினி வைஷ்ணவ்வை ஆதரிப்பதாக பிஜூ ஜனதா தளம் திடீரென அறிவித்திருப்பது பெரும் திருப்பமாகப் பார்க்கப்படுகிறது.




இவையெல்லாம் ஒருபுறமிருக்க, ஒரிசா ராஜ்யசபா தேர்தலில் பா.ஜ.கவைச் சேர்ந்த மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவுக்கு ஆதரவு தெரிவிப்பதாக ஆளும் பிஜூ ஜனதா தளம் அறிவித்துள்ளது பெரிய திருப்பமாகப் பார்க்கப்படுகிறது.

ஒரிசாவில் மொத்தம் 3 ராஜ்யசபா எம்.பி இடங்களுக்கான தேர்தல் நடைபெற உள்ளது. ஒடிஷாவின் ஆளும் பிஜூ ஜனதா தளத்தின் அமர் பட்நாயக், பிரசந்தா, நந்தா, பா.ஜ.கவின் மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் ஆகியோரது ராஜ்ய

தேபாஷிஸ் சமந்த்ராய், சுபாஷிஷ் குனிதா ஆகியோர் போட்டியிடுவர் என முதல்வர் நவீன் பட்நாயக் அறிவித்திருந்தார்.

ஆனால் 3 ஆவது வேட்பாளரை பிஜூ ஜனதா தளம் நிறுத்தவில்லை. பிஜூ ஜனதா தளத்தின் இந்த நிலைப்பாடு விவாதப் பொருளானது.

தற்போது ஒரிசா ராஜ்யசபா தேர்தலில் மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் போட்டியிடுவார் என டில்லி பா.ஜ.க மேலிடம் அறிவித்தது. இதனைத் தொடர்ந்து மாநிலத்தின் நலன் கருதி பா.ஜ.க வேட்பாளர்

## பிரதமர் நரேந்திர மோடியின் அரசை எதிர்க்கும் பலத்தை இழந்து நிற்கிறது காங்கிரஸ்!

ஒரிசாவில் ஆளும் பிஜூ ஜனதா தளம் கட்சியும் நீண்டகாலம் பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் நீடித்தது. பின்னர் பா.ஜ.கவுடனான கூட்டணியை முறித்துக் கொண்டது.

அதேநேரத்தில் நாடாளுமன்றத்தில் பல்வேறு சூழல்களில் மத்திய பா.ஜ.க அரசுக்கு ஆதரவாகவும் செயல்பட்டு வருகிறது பிஜூ ஜனதா தளம். ஒரிசாவில் ஆளும் பிஜூ ஜனதா தளத்துக்கு எதிரான கட்சியாக பா.ஜ.க இருக்கிறது.

இந்நிலையில் காங்கிரஸ் தமது இருப்பை இழந்து கொண்டிருக்கிறது என்பது நன்றாகவே தெரிகின்றது.

தற்போது லோக்சபா தேர்தல் நெருங்கும் நிலையில், தேசிய ஜனநாயகக் கூட்டணியை வலுப்படுத்துவதில் பா.ஜ.க மேலிடம் தீவிரம் காட்டுகிறது. இந்த பின்னணியில் ராஜ்யசபா தேர்தலில் பா.ஜ.கவின் மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவுக்கு பிஜூ ஜனதா தளம் ஆதரவை தெரிவித்திருக்கிறது. இதனால் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு மீண்டும் பிஜூ ஜனதா தளம் திரும்புமா? என்கிற விவாதம் எழுந்துள்ளது.

இதேவேளை தேசிய ஜனநாயகக் கூட்டணியை வலுப்படுத்தும் வகையில் அகாலி தளம், தெலுங்கு தேசம் மற்றும் அண்ணா தி.மு.கவை மீண்டும் பா.ஜ.க அணிக்கு கொண்டு வருவதற்கும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சட்டசபையில் திடீரென அ.தி.மு.க மூத்த தலைவர் தங்கமணியும் பா.ஜ.க எம்.எல்.ஏ. வானதி சீனிவாசனும் 15 நிமிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அதற்கு முன்னதாக தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன், அ.தி.மு.கவை பா.ஜ.க அணிக்கு கொண்டு வரும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். ஆந்திராவில் சந்திரபாபு நாயுடு அண்மையில் டெல்லியில் முகாமிட்டு பா.ஜ.க கூட்டணிக்கு திரும்புவது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்தி இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்திய அரசியலின் இக்காட்சிகளை வைத்து நோக்கும்போது, நரேந்திர மோடி அரசை எதிர்வரும் தேர்தலில் வீழ்த்துவதற்காக உருவாக்கப்பட்ட 'இந்தியா' கூட்டணி வெகுவிரைவில் துண்டுதுண்டாகி காணாமல் போய் விடுமென்றே நம்பப்படுகின்றது.

# மாணவனின் சத்திரசிகிச்சைக்கு உதவிய ஹேமாஸ் மருத்துவமனை



இலங்கையின் பாடசாலையொன்றில் தரம் 4 வகுப்பில் கற்கும் மாணவர் ஒருவருக்கு ஹேமாஸ் மருத்துவமனை இலவச சத்திரசிகிச்சையை வழங்கி உதவி புரிந்துள்ளது. கல்வியில் திறமை வாய்ந்த பாக்கியராஜ் முரளிதரன் என்ற இம்மாணவர் கணுக்கால் பாதிப்புக்கு உள்ளாகியிருந்தார். அரிதாக ஏற்படுகின்ற இப்பாதிப்புக்குள்ளான இம்மாணவனுக்கு ரூபா ஐந்து இலட்சம் செலவிலான சத்திரசிகிச்சையை ஹேமாஸ் மருத்துவமனை இலவசமாக வழங்கியுள்ளது.

பாக்கியராஜ் முரளிதரன் என்ற இம்மாணவர் பலாங்கொடை தமிழ் மகாவித்தியாலயத்தில் தரம்4 வகுப்பில் கற்கின்றார். மிகவும் அரிதாக ஏற்படுகின்ற கணுக்கால் பாதிப்பினால் இம்மாணவர் அவதியுற்று வந்தார். இப்பாதிப்புக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று மருத்துவர்கள் பரிந்துரை செய்திருந்தனர்.

பாதிக்கப்பட்ட எலும்புகளை மறுசீரமைக்கும் சத்திரசிகிச்சையில் நிபுணத்துவம் வாய்ந்த டொக்டர் டி. எஸ். குமார இந்த சத்திரசிகிச்சையை மேற்கொண்டார்.

இம்மாணவர் இந்தியாவின் *Cholan Book of World Records* இல் இருந்து சிறந்த நினைவுத்திறனுக்கான விருதை வென்றவராவார். அத்தகைய சாதனைகளை படைத்த திறமை வாய்ந்த இம்மாணவனுக்கு மருத்துவ நிபுணர் டி. எஸ். குமார இந்த சத்திரசிகிச்சையை மேற்கொண்டார்.

500,000 ரூபாவுக்கு மேல் செலவாகும் இச்சத்திரசிகிச்சையை முரளிதரனின் குடும்ப பொருளாதாரத்தை கவனத்தில் கொண்டும், அம்மாணவன் பின்தங்கிய கிராமத்தைச் சேர்ந்தவர் என்பதாலும் ஹேமாஸ் மருத்துவமனை இந்த உதவியை இலவசமாக வழங்கியது.

இச்சத்திரசிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. இப்பாதிப்பு காரணமாக அவதியுற்ற மாணவர் தற்போது குணமடைந்து வருகின்றார்.

# இன்றைய பலன்கள்
## (17.02.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
உடல்நலம் சீராகும். உள்ளத்திலும் அமைதி கிடைக்கும். சொத்துக்கள் வாங்குவதில் இருந்த தடைகள் அகலும்.

**ரிஷபம் :**
கூடுதல் விரயங்கள் ஏற்படலாம். பயணங்கள் அதிகரிக்கும். உறவினர்களுக்கு உதவி செய்வீர்கள் .இடமாற்றங்கள் இனிமை தரும்.

**மிதுனம்:**
ஆரோக்கியத்தில் தொல்லை அதிகரிக்கும். அதிகாலை முதல் இரவு வரை உழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் வந்து சேரும்.

**கடகம்:**
அனைத்து வழிகளிலும் உங்களுக்கு நன்மை உண்டு. பொருளாதார நிலை உச்சம் தரும். புதிய வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு அது கைகூடும்.

**சிம்மம்:**
காரியங்கள் துரிதமாக நடைபெறும். கவலை என்ற மூன்று எழுத்து உங்கள் அகராதியை விட்டு அகல போகிறது.

**கன்னி:**
ஆரோக்கிய தொல்லைகள் கொஞ்சம் அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் கூடும். வாங்கிய சொத்துக்களை விற்க நேரலாம்.

**துலாம்:**
குடும்ப முன்னேற்றம் கூடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். தனவரவு திருப்தி தரும் . உதிரி வருமானங்கள் வந்து உள்ளத்தை மகிழ்விக்கும்.

**விருச்சிகம்:**
தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். தொழில் ரீதியாக எடுத்த முயற்சி லாபம் தரும். வியாபாரத்தில் போட்டி போட்டவர்கள் விலகுவர்.

**தனுசு:**
பிள்ளைகள் வழியில் சுபகாரிய பேச்சுக்கள் முடிவாகும். படித்து முடித்த பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பு அல்லது வெளிநாடு செல்லும் வாய்ப்பு உருவாக வழி பிறக்கும்.

**மகரம்:**
கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும். வளர்ச்சி கூடும். தெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:**
விரயங்கள் கூடுதலாக இருக்கும். உடன்பிறப்புகள் வழியில் நடைபெறும் சுப காரியங்களை முன்னிட்டு ஒரு தொகையை கொடுத்து உதவுவீர்கள்.

**மீனம்:**
தொழிலில் எதிர்பார்த்ததை காட்டிலும் கூடுதல் லாபம் கிடைக்கும். சமூகத்தில் உள்ள முக்கிய பொறுப்புகளுக்கு உங்களை தேர்ந்தெடுப்பர்.

### டி.ஆர்.விஜேவர்தனவின்...

எதிர்வரும் 21ஆம் திகதி இரவு 9.00 மணிக்கு சமய அனுஷ்டானம் வழங்கும் நிகழ்வு நடைபெறும். கோட்டை ஸ்ரீசம்புத் தலோக்க விஹாரை மற்றும் ஹுனுபிட்டிய கங்காராம விஹாரையின் தேரர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளார்கள். சமய அனுஷ்டானம் வழங்கும் நிகழ்வுக்கு தேரர்களை அழைத்து வரும் பெரஹர அன்று இரவு 8.45 மணிக்கு கோட்டை ஸ்ரீ சம்புத் தலோக்க விஹாரையிலிருந்து ஆரம்பமாகும். இந்த சமய அனுஷ்டானம் வழங்கும் நிகழ்வு தேசிய தொலைக்காட்சியிலும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும் நேரடியாக ஒளி, ஒலிபரப்பு செய்யப்படும். 22 ஆம் திகதி தானம் வழங்கும் நிகழ்வு நடைபெறும்.

### இஸ்ரேலுக்கும் இலங்கைக்கும்...

இலங்கை பணியாளர்கள் வெளிநாடுகளுக்கு செல்வதில் ஏற்படும் தாமதத்தை தடுப்பதும் இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகுமெனவும், அமைச்சர் தெரிவித்தார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே, அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இச்சந்திப்பில் அமைச்சர் மேலும் தெரிவித்த போது, "இந்த ஒப்பந்தத்துக்கமைய இரு நாடுகளுக்கும் இடையில் நேரடி விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. பயணிகளுக்கு வசதியை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும். பல இஸ்ரேலியர்கள் இலங்கைக்கு சுற்றுப்பயணம் செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் இஸ்ரேலிய போக்குவரத்து அமைச்சர் எம்மிடம் குறிப்பிட்டார்.

அத்துடன், பலாலி விமான நிலையத்தினூடாக இந்தியாவுக்கான மற்றுமொரு தினசரி விமான சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக இண்டிகோ (Indigo Airlines) விமான சேவை நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், மத்தள விமான நிலையம் தொடர்பாக முதலீட்டு விருப்பங்களும் கோரப்பட்டுள்ளன. இதற்கமைய டெண்டர் சபை, ஒரு முதலீட்டாளரை தெரிவு செய்துள்ளது.

இம்முதலீட்டாளருடனான பேச்சுவார்த்தை தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளது. அடுத்த வாரம் உடன்பாடு எட்டப்படலாம். அதன் மூலம் அந்த விமான நிலையத்தையும் இலாபம் ஈட்டும் வகையில் மாற்ற முடியும். இந்த ஒப்பந்தம் ரஷ்ய மற்றும் இந்திய தனியார் கூட்டுத் திட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

### மக்களின் நேரடி தெரிவுகளாகவே...

தெரிவித்துள்ளார். கடந்த மூன்று வருடங்களாக பன்முகப்படுத்தப்பட்ட நிதி மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படாத போதும் இம்முறை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ். மாவட்டத்துக்கென 322 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று தெரிவித்தார். யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று (16) மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு பேசும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இம்முறை ஒதுக்கப்பட்ட நிதி மிக சொற்பமானதாகவே உள்ளது. அதாவது சிறு விடயங்களை மேற்கொள்வதற்கான நிதியாகவே உள்ளது. அதற்கிணங்கவே இம்முறை பிரதேச செயலகங்களால் கிராமங்கள் தோறும் கூட்டங்கள் நடத்தப்பட்டு அப்பிரதேச மக்களின் நேரடி தெரிவுகளாக திட்டங்களும் முன்மொழிவுகளும் திரட்டப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமது ஒப்புதலின்றி 2024ஆம் ஆண்டு வரவு, செலவுத் திட்டத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். இதற்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஜனாதிபதியுடன் நேரடியாக தொடர்புகளை பேணி வருபவர்கள் என்று சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதிக்கு இவ்விடயம் தொடர்பில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுத்திலும் அனுப்பியுள்ளனர். அதற்கு ஜனாதிபதியும் இணங்கியுள்ளதாக தெரியவருகின்றது.

அதன்படியே ஜனாதிபதிக்கு உங்களது தெரிவுகளை அனுப்புங்கள் அல்லது எம்மிடம் தாருங்கள் என்று நான் கூறினேன். அத்துடன் இத்திட்டத்தில் தமது திட்டங்களும் உள்வாங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்துள்ளனர். அதனடிப்படையில் ஒரு வாரத்துக்குள் அவர்களது திட்டங்களையும் உள்வாங்கி உரிய தரப்பினர்களுக்கு வழங்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார். அத்துடன் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான குடிநீர் விநியோகம் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது.

### IMF இன் திட்டம்...

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்துக்கு ஏதேனும் இடையூறு ஏற்படும் பட்சத்தில் நம்பிக்கையின்மை, முதலீட்டாளர்களின் எதிர்மறை உணர்வுகள் காரணமாக பாரிய பொருளாதார இழப்பை எதிர்கொள்ள வேண்டியிருக்குமெனவும், மத்திய வங்கி தெரிவித்தது. இலங்கை தனது பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தியுள்ளதுடன், பொருளாதார நடவடிக்கைகள் மீட்டெடுக்கப்படுகின்றன. எனினும் குறுகிய காலத்துக்கு வளர்ச்சி குறைவானதாகவே காணப்படுமெனவும், மத்திய வங்கி தெரிவித்தது.



சர்வதேச ரோட்டரிக்கழக மாவட்டம் 32, 34 சென்னை, தமிழ்நாடு அமைப்பின் ஏற்பாட்டில் வருங்கால தலைவர்களை தெரிவு செய்யும் முறை பற்றிய கருத்தரங்கு நேற்று கொழும்பு சினமன் லேக் ஹோட்டலில் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்ட பேராளர்களை படத்தில் காணலாம்.

குறைபாடுகளை நன்கு அறிவேன்

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதே சிறந்தது

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ



நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதே சிறந்ததாக இருக்குமென, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

முன்னர் அப்பதவியை வகித்தமையால் அதன் குறைபாடுகள் தொடர்பாக நன்கு அறிந்துள்ளதாகவும், அவர் குறிப்பிட்டார். நாட்டின் அரசியல் நிலைமை சிறந்த நிலையில் உள்ளதுடன், முழு நாடும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்க விருப்பம் தெரிவித்துள்ளது. ஆகையால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தபோது, " ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முயற்சிப்பது எதிர்க்கட்சிகளுக்கு ஒரு பொறியாக இருக்கலாம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாம் நன்கு அறிவோம். எந்தத் தேர்தல் வந்தாலும், எமது கட்சி வேட்பாளர் வெற்றி பெறுவார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் உரிய நேரத்தில் அறிவிக்கப்படுவார்.

### காங்கேசன்– நாகபட்டினம...

கிடைக்குமெனவும் தெரிவித்தார். சுமூகமான எல்லைக் கடப்புகளை உறுதிப்படுத்த இறங்குதுறை புனரமைப்பு, சுங்க மற்றும் குடிவரவு, குடியகல்வு வசதிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் அவசியம் தொடர்பாகவும் அவர் இதன்போது கூறினார்.

### பெற்றோலிய களஞ்சிய...

தெரிவித்துள்ளார். X பதிவில் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ள போது,

"பிரதான தரவுக் கட்டமைப்பிலிருந்து அல்லது SAP தளத்திலிருந்து 13 இலட்சம் தரவுகள் அழிக்கப்பட்டு அல்லது மாற்றப்பட்டுள்ளன. கடந்த 2010ஆம் ஆண்டிலிருந்து தரவு அழிப்பு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளன. எரிபொருள் நெருக்கடி நிலவிய 2022ஆம் ஆண்டிலேயே பெருமளவான தரவு அழிப்பு செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான முழுமையான அறிக்கை எதிர்வரும் வாரம் KPMG நிறுவனத்தால் வழங்கப்பட்ட பின்னர், அதனை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு வழங்க தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அறிக்கையை மேலதிக நடவடிக்கைக்காக அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்துக்கும் கணக்காய்வாளர் திணைக்களத்துக்கும் சட்டமாஅதிபர் திணைக்களத்துக்கும் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

### யாழில் நடக்கும் இசை...

செலுத்தியிருக்க வேண்டும். நானும் அதனை பார்த்திருக்க வேண்டும். நானும் அது தொடர்பில் கரிசனை இல்லாமல் இருந்து விட்டேன்.

இனிவரும் காலங்களில் இப்படியான நிகழ்ச்சிகள் நடைபெறுமாக இருந்தால் , மக்கள் பிரச்சினைகளின்றி மகிழ்ச்சியாக நிகழ்வுகளைக் கண்டுகளிக்கக் கூடியவாறான ஏற்பாடுகளைச் செய்வோமெனவும், அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### எனக்கு எந்த தொடர்பும்...

வழக்குகள் , சுமந்திரனின் ஆதரவாளர்களால் தொடரப்பட்டது எனவும் வழக்குகளில் முன்னிலையான சட்டத்தரணிகளும் சுமந்திரனுக்கு ஆதரவானவர்கள் எனவும் கருத்துக்கள் வெளியாகி வந்த நிலையில் அது தொடர்பில் கேட்ட போதே அவ்வாறு தெரிவித்தார். தடை கோரி தொடரப்பட்ட வழக்குகளுக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை. எவராலோ தொடரப்பட்ட வழக்குகள் தொடர்பில் நான் கருத்து கூற முடியாது. அத்துடன் அதற்கு பொறுப்பாளியாகவும் முடியாது.

கட்சி கோரிக்கை விடுத்தால் இந்த வழக்குகளுக்கு எதிராக நீதிமன்றங்களில் நான் முன்னிலையாகி கட்சி சார்பாக வாதாட தயாராகவுள்ளேன் என தெரிவித்தார்.

### 72 பலஸ்தீன பத்திரிகையாளர்...

செய்யப்பட்டிருக்காவிட்டால், கடந்த வருடம் உலகில் கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர்கள் எண்ணிக்கை முன்னைய வருடங்களை விட குறைவாக காணப்பட்டிருக்குமெனவும், பத்திரிகையாளர் பாதுகாப்பதற்கான குழு தெரிவித்துள்ளது. காசா இஸ்ரேல் யுத்தத்தின் முதல் 03 மாதங்களில் நாடொன்றில் ஒரு வருடத்தில் கொல்லப்பட்டதை விட அதிகமான பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளதை தாம் ஏற்கெனவே தெரிவித்திருந்ததாகவும், பத்திரிகையாளர்களை பாதுகாப்பதற்கான குழு தெரிவித்துள்ளது.

காசாவில் கொல்லப்பட்ட 77 பத்திரிகையாளர்களில் 72 பேர் பலஸ்தீனர்கள். 03 பேர் லெபனானை சேர்ந்தவர்கள். 02 பேர் இஸ்ரேலியர்களென, Committee to Protect Journalists தெரிவித்துள்ளது. பத்திரிகையாளர்களுக்கான அச்சுறுத்தல் என்ற விடயத்தை பொறுத்தவரை காசா யுத்தம் முன்னொரு போதும் இல்லாத அச்சுறுத்தலாக காணப்படுவாக, பத்திரிகையாளர்களை பாதுகாப்பதற்கான குழுவின் ஜோடி கின்ஸ்பேர்க் தெரிவித்துள்ளார்.

இந்த யுத்தத்தை பொறுத்தவரை காசா பத்திரிகையாளர்களால் மாத்திரமே காசாவுக்குள் என்ன நடைபெறுகின்றதென்ற செய்தியை வெளியுலகுக்கு தெரிவிக்க முடியுமென்பதை மனதில் கொள்ள வேண்டுமெனத் தெரிவித்துள்ள அவர், சர்வதேச பத்திரிகையாளர்களுக்கு காசாவுக்குள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இஸ்ரேலிய இராணுவத்தினர் அழைத்துச் சென்றால் மாத்திரமே சர்வதேச பத்திரிகையாளர்களால் அங்கு செல்ல முடியுமெனவும், அவர் குறிப்பிட்டுள்ளார். ஆகவே செய்திகளை வெளிக்கொணர்வதற்காக தமது உயிர்களை பணயம் வைக்கும் பலஸ்தீன பத்திரிகையாளர்களையே நம்பியிருப்பதாகவும், அவர் தெரிவித்துள்ளார். காசா யுத்தத்தின் போது பலஸ்தீன பத்திரிகையாளர்களுக்கு போதிய ஆதரவின்மை தொடர்பாக தான் ஏமாற்றமடைந்துள்ளதாகவும், அவர் தெரிவித்துள்ளார். இது இஸ்ரேல் முன்னெடுத்துள்ள யுத்தமென்பதால் காசாவில் இலக்கு வைக்கப்படுபவர்கள், கொல்லப்படுபவர்களுக்கான ஆதரவை வெளியிட மேற்குலகம் தயங்குவதாகவும் தெரிவித்துள்ள அவர், இஸ்ரேல் இந்த யுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால் சர்வதேச ஊடகங்கள் பிளவுபட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

### கட்சிக்கு எதிரான சூழ்ச்சிகள்...

நீதிமன்றங்களில் மாநாட்டுக்கு தடை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையைத் தொடர்ந்து, இவ்விரு மாவட்ட நீதிமன்றங்களாலும் மாநாட்டுக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த தடை உத்தரவு தொடர்பாக கருத்துத் தெரிவித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது, "எந்த வழக்கையும் நாம் எதிர்கொள்ளத் தயார். எமக்கு எதிராக முன்னெடுக்கப்படும் சூழ்ச்சிகள், தடைகளை நாம் மக்களின் ஆத்ம பலத்துடன் முறியடிப்போம். என்னையும் எனது கட்சியையும் குழப்பும், அச்சுறுத்தும் வகையில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இவற்றை கண்டு நாம் அஞ்சப் போவதில்லை. என்னை தமது தலைவராக ஏற்றுக்கொண்ட கட்சியையும் எமது மக்களையும் இப்படியான சூழ்ச்சிகளால் முடக்க முடியாது. எத்தனை வழக்குகள் வந்தாலும், அவற்றை எதிர்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம். நீதி நிச்சயம் வெல்லும்" எனத் தெரிவித்தார்.

### முஸ்லிம் சமூகத்திடம்...

தயாராகவுள்ளதாகவும், அவர் தெரிவித்துள்ளார். ஞானசாரதேரரின் சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பான விசாரணை பூர்த்தியடைந்த நிலையில் எதிர்வரும் மார்ச் 28ஆம் திகதி தீர்ப்பு அறிவிக்கப்படுமென, நீதிபதி தெரிவித்துள்ளார்.

2016ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் திகதி மேற்படி ஆலயத்தில் ஞானசாரதேரர் தெரிவித்த கருத்தானது இன, மத ஐக்கியத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகக் கூறி சட்ட மாஅதிபர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

# புனித ஜோசப் வாஸ் மன்றத்தின் திறந்தவெளி சிலுவைப்பாதை

## நாளை பிற்பகல் 03 மணிக்கு ஆரம்பம்

கொழும்பு, புனித ஜோசப் வாஸ் மன்றம் வருடாந்தம் நடத்தும் தவக்கால திறந்தவெளி பெரிய சிலுவைப் பாதை இம்முறை நாளை (18) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 .15 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இந்நிலையில் புதுச்செட்டித் தெரு புனித வியாகுல மாதா தேவாலயத்திலிருந்து சிலுவைப்பாதை பவனி ஆரம்பமாகி கொழும்பு ஜெம்பட்டா வீதி, கண்ணாரத்தெரு, ஜிந்துப்பிட்டி, விவேகானந்தர் மேடு வழியாக கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தை சென்றடையவுள்ளது.

சிலுவைப்பாதையில் 14 திருநிலைகள் தியானிக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து பேராலய முன்றலில் சிறப்புத் திருப்பலியுடன் திறந்தவெளி பெரிய சிலுவைப்பாதை நிகழ்வுகள் நிறைவடையவுள்ளன.

கொழும்பு உயர்மறை மாவட்ட துணை ஆயர் பேரருட்திரு பி.அன்டன் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது.

சிலுவைப்பாதை தியானத்தின் போது, அருளுரைகளை மன்றத்தின் ஸ்தாபகர் அருட்பணி ஆனந்தன் பெர்னாண்டோபுள்ளே அடிகளாரின் தலைமையில் அருட் பணியாளர்கள் பலரும் வழங்கவுள்ளனர்.


இறுதி சிறப்பு திருப்பலி பூஜை, துணை ஆயர் பேரருட்திரு அன்டன் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் 6.30 மணியளவில் ஒப்புக்கொடுக்கப் படவுள்ளதாக, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# சர்வதேச றொட்ரிக்கழக மாநாட்டில் மலரன்பனுக்கு விருது



*சென்னை, தமிழ்நாடு சர்வதேச றொட்ரிக் கழகம் வருங்கால தலைவர்களை உருவாக்கும் முகமாக நடாத்திய பயிற்சிப் பட்டறையின் நிறைவுவிழா இன்று (17.02.2024) கொழும்பு Cinnamon Lake Hotel லில் முன்னாள் சர்வதேச றொட்ரிக் கழகத்தின் இயக்குனர் எ.எஸ். வெங்கடேஷின் தலைமையில் நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் 2024/2025 ஆளுநர் என்.எஸ்.சரவணன், மாவட்ட ஆளுநர்கள், உதவி ஆளுநர்கள், முதற்பெண்மணிகள் என இருநூறு பேர் வரை கலந்து கொள்கின்றனர்.*

*சென்னையைச் சேர்ந்த றொட்ரிக் லெஜன்ட் தலைவர் டாக்டர் குமார் ராஜேந்திரன், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, கலைஒளி முத்தையா பிள்ளை நினைவுகுழு சார்பில் பேராசான் மு.நித்தியானந்தன், எச்.எச் விக்கிரமசிங்க ஆகியோர் தொகுத்து பதிப்பித்த மலரன்பனின் சிங்களத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்த்த 'கொழுஷா' என்ற பிறமொழி சிறுகதை தொகுதிக்கு ஒரு லட்சம் (ரூபா 100,000) விருது வழங்கி கௌரவிக்கின்றார்.*





### பலஸ்தீன அரசை அமைக்க...

மிரி ரெகேவ் (Brig. Gen. Miri Regev) ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போதே ஜனாதிபதி அவரிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஹமாஸ் போராளிகளால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ள இஸ்ரேலியர்களை மீட்பதற்கு இலங்கை தொடர்ச்சியாக ஒத்துழைப்பு வழங்கும் என்றும் காஸா பகுதியில் இடம்பெறும் மோதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

### தேர்தல்களுக்கானது அல்ல...

இது எமது தமிழ் முற்போக்கு கூட்டணியின் தூரநோக்கு சிந்தனையின் வெற்றி" என, மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கமொன்றை உருவாக்குமானால், அப்போது, எமது மக்கள் தொடர்பாக முன்னெடுக்கக்கூடிய நிலவுரிமை திட்டங்கள் என்ன? என்பது பற்றிய எழுத்து மூலமான உள்ளக சமூக நீதி உடன்பாடு இதுவாகும். இது தேர்தல் ஒப்பந்தம் அல்ல. தேர்தல் ஒப்பந்தம், தேர்தல் வரும் போது உருவாகுமென்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய அளவில் நடந்துள்ள இந்நிகழ்வு பற்றி கேள்வி எழுப்பும், ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் ஐ.தே.க. கூட்டணி, அநுரகுமாரவின் என்.பி.பி. கூட்டணி, தரப்புகளுக்கு எமது இந்த சமூக நீதி உடன்பாடு விபரங்களை அனுப்பி வைக்க நாம் தயார். அவர்களது பதில் நிலைப்பாடுகள் என்ன என அவர்கள் எமக்கு அறிவித்தால் அவை பற்றியும் கலந்தாலோசிக்க நாம் தயார். ஜனாதிபதி ரணிலும், அநுரவும் தயாரா? என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

இது பற்றி மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது,

"இந்நாட்டில் வாழும் 15 இலட்சம் மலையக தமிழ் மக்கள் என்ற இன அடையாளத்துக்குள், சரிபாதி சனத்தொகை இன்னமும் பெருந்தோட்டங்களில் வாழ்கின்றனர். இந்நாட்டின் ஏனைய மக்களுடன் ஒப்பிடும் போது, இந்த பெருந்தோட்ட மக்கள், சமூக பொருளாதார வளர்ச்சியில் இந்நாட்டிலேயே பின்தங்கியவர்கள்.

இதற்கு காரணம், மலைநாட்டு அரசியல்வாதிகள் மட்டுமே என்ற கவர்ச்சிகரமான பிரசாரம் முன்னெடுக்கப்படுகிறது. இது வரலாற்றை திட்டமிட்டு மூடி மறைக்கும் சூழ்ச்சி. இந்த கண்ணாமூச்சி கவர்ச்சி கதையில் நாம் மயங்கி விடக்கூடாது. மலைநாட்டு அரசியல்வாதிகள் மீது பெரும் குற்றச்சாட்டுகள் உள்ளன. அவற்றில் உண்மைகளும் உள்ளன. ஆனால், எமது மக்களின் குறை வளர்ச்சிக்கு முதல் மூன்று காரணங்கள், பேரினவாதம், இந்திய அரசு, இங்கிலாந்து அரசு ஆகியவை ஆகும்.

சுதந்திரம் பெற்றவுடன் எமது குடியுரிமை, வாக்குரிமைகளை பறித்து எமக்கு இன்று காணி, கல்வி, சுகாதாரம் ஆகிய உரிமைகள் முழுமையாக இல்லாமல், எம்மை பெருந்தோட்ட அமைப்புக்குள்ளே இரண்டாந்தர பிரஜைகளாக வைத்திருப்பது பேரினவாதம் ஆகும். எம்மை கேட்காமலே, எம்மில் பெரும்பான்மையோரை நாடு கடத்தி, எம்மை அரசியல் ரீதியாக பலவீனப்படுத்தியது இந்திய அரசு ஆகும். எம்மை இங்கே அழைத்து வந்து, எமது உழைப்பில் நன்கு சம்பாதித்து விட்டு, எம்மை அம்போ என விட்டு ஓடியது இங்கிலாந்து அரசு ஆகும். இந்த வரலாற்றால் ஏற்பட்டுள்ள தாழ்நிலைமைகளில் இருந்து வெளியே வருவது சுலபமான காரியம் அல்ல.

# கிழக்கின் குரல்



# தாயாக கரம்கொடுப்போம் செயற்றிட்டம் ஆரம்பம்





தாயாக கரம்கொடுப்போம் செயற்றிட்டத்தினூடாக பொருளாதார நெருக்கடி மத்தியில் கல்வி நடவடிக்கைகளை தொடரும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு திருகோணமலையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மகளிர் அணி, கட்சி கிராமிய குழு உறுப்பினர்களுடன் இணைந்து இச்செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளது. கடந்த கால யுத்தம், கொவிட்தொற்று அதன் பின்னரான பொருளாதார நெருக்கடி, பொருட்களின் விலையேற்றம் போன்ற காரணங்களால் பெரிதும் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு உதவும் முகமாக 'தாயாக கரம் கொடுப்போம்' எனும் தொனிப்பொருளில் கிழக்கு மாகாணம் பூராகவும் இச்செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது.

இச்செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் மகளிர் அணியின் ஏற்பாட்டில் கட்சியின் மகளிர் அணிச்செயலாளர் சுசிகலா அருள்தாஸ் தலைமையில் மாவடிச்சேனை வெருகலம்பதி இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில்

வட்டவான் தான்தோன்றீஸ்வரர் வித்தியாலயம், பூமரத்தடிச்சேனை ஸ்ரீ சித்தி விநாயகர் வித்தியாலயம், ஈச்சிலம்பற்று சிவானந்தா ஆரம்ப பாடசாலை, வட்டவான் தண்ணிப்பூவல் வித்தியாலயம் போன்ற பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. அதேபோல் வாழைத்தோட்டம் மீனாட்சி அம்மன் வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கை துறை கனிஷ்ட வித்தியாலயம், உப்பூறல் சிவசக்தி வித்தியாலயம், முத்துச்சேனை வித்தியாலயம், புண்ணையடி நாமகள் வித்தியாலயம், கல்லடி மலை நீலியம்மன் வித்தியாலயம் போன்ற பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் மற்றும் அப்பியாச கொப்பிகள் போன்றன வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான சிவ.சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்ததுடன், அப்பாடசாலைகளின் வளப்பற்றாக்குறைகள், தேவைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டதுடன் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான முனைப்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி Z.M.M நலீம், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் இணைப்பு செயலாளருமான பூ.பிரசாந்தன், கோட்டக்கல்வி பணிப்பாளர் தயாபரன், உதவி கல்வி பணிப்பாளர் A.W.M ஜவாத், பிரதிக் கல்விப் பணிப்பாளர் அப்பாஸ், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பிரதம பொருளாளர் ஆ.தேவராஜ், கட்சியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் கு.நளினகாந்தன், கட்சியின் திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் மா.ரங்கன் மூதூர் தொகுதி அமைப்பாளர் திரு. சி.புவனேஷ்வரன் உட்பட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், கட்சியின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## கிழக்கு ஆளுநர்
# கல்முனை ஸ்ரீ தரவை சித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தில் பங்கேற்பு



(பெரியநீலாவணை விசேட நிருபர்)

கல்முனை ஸ்ரீ தரவை சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகா உற்சவத்தை முன்னிட்டு இரண்டாம் நாள் நிகழ்வுகள் அண்மையில் ஆலயத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது. இரண்டாம் நாள் நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

சிவஸ்ரீ ந.பத்மநிலோஜன் குருக்கள் விசேட பூசை நிகழ்வுகளை நடத்தி வைத்ததுடன் ஆலய பரிபாலன சபையினரால் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எம். கோபாலரத்தினம் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதில் ஆலயத்தின் பரிபாலன சபையினர் நலன் விரும்பிகள் பிரதேச கல்விமான்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# வீதிகளில் நெல் உலர்த்துவதால் விபத்து

(தோப்பூர் தினகரன் நிருபர்)



மூதூர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சேருவில – மூதூர் பிரதான வீதியில் பாலத்தோப்பூர் பகுதிலுள்ள வீதிகளில் நெல் உலர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் இவ்வீதியால் தினமும் சென்று வர முடியாத நிலை காணப்படுவதோடு வீதி விபத்துகளும் இடம்பெறுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து உரிய பகுதியினர் கவனமெடுக்கவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கல்முனை கார்மேல் பற்றிமாவில் பொங்கல் விழா!





(காரைதீவு குறூப் நிருபர்)

கிழக்கில் புகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் வருடாந்த தைப்பொங்கல் விழா நேற்று (16) வெள்ளிக்கிழமை கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ச.இ. றெஜினோல்ட் எவ்.எஸ்.ஸி. தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. முன்னதாக மாட்டு வண்டி சகிதம் பாரம்பரிய முறைப்படி பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது. அதிதிகளாக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்திய சாலை மகப்பேறு வைத்திய நிபுணர் டொக்டர் கோ.வசந்தராஜா அம்பாறை நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் திருமதி புவிராஜினி விஷ்ணுரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர். அங்கு பற்றிமா பழைய மாணவர்களான வைத்திய கலாநிதி டாக்டர் வசந்தராஜா, பொறியியலாளர் புவிராஜினி ஆகியோர் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# உடற்பயிற்சிக்கு சென்ற போதகர் விபத்தில் பலி

(மண்டூர் தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு தலைமையகப்பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு திருகோணமலை பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் போதகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கோவிந்தன் வீதி மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய கந்தையா சந்திரசேகர் என்பவரே இவ் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கடந்த 14 ஆம் திகதி தனது வீட்டிலிருந்து வழக்கம்போல் உடற்பயிற்சிக்காக வீதி வழியாக சென்று கொண்டிருக்கும் போது அவ்வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மட்டக்களப்பு நீதிமன்ற நீதவானின் உத்தரவுக்கமைய சம்பவ இடத்திற்கு சென்று பிரேதத்தை பார்வையிட்ட மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் பிரேதத்தை உடற்கூற்று பரிசோதனைக்குட்படுத்தும்படி சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிந்துரைத்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட திருக்கோவில் மக்களுக்கு புதிய வீடுகள்
## ஆளுநர் செந்திலுக்கு மக்கள் நன்றி தெரிவிப்பு





அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு ஐந்து மாதக் காலத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் முயற்சியால் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வீடுகள் இன்றி பல இன்னல்களுக்கு முகம்கொடுத்தனர்.

இவ்விடயம் தொடர்பில் அம்பாறை மாவட்ட அரச அதிபர், திருக்கோயில் பிரதேச செயலாளர், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்களால் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அதற்கமைய ஆளுநர் திருக்கோவில் பிரதேசத்திற்கு விஜயம் செய்து மக்களின் குறைகளை கேட்டறிந்ததுடன் மக்களின் கோரிக்கையை ஏற்று ஐந்து மாதக் காலத்திற்குள் அவர்களுக்கான வீடுகளை நிர்மாணித்து கையளித்துள்ளார்.

திருக்கோவில் மாவட்ட மக்கள் தங்களது கோரிக்கையை குறுகிய காலத்தில் நிறைவேற்றியமைக்காக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் திருக்கோயில் பிரதேச செயலாளருக்கும் தங்களது நன்றிகளை தெரிவித்துள்ளனர்.

# பல்கலைக்கழக அறிவுசார் வளங்களை பரிமாறிக்கொள்ளும் நிகழ்ச்சி திட்டம்

(ஒலுவில் விசேட நிருபர்)



தென்கிழக்கு மற்றும் களனிப் பல்கலைக்கழகங்களிடையே அறிவுசார் வளங்களை பரிமாறிக் கொள்ளும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் களனி பல்கலைக்கழக புவியியல் துறை மாணவர்களுக்கு ட்ரோன் தொழில்நுட்ப பயன்பாடு மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான செயலமர்வு நேற்று முன்தினம் (15) தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் நடைபெற்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் புவியியல் துறை திணைக்களத்தின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் கே. நிஜாமிர் தலைமையில் நடைபெற்ற செயலமர்வில் பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் கலந்து கொண்டார்.

ட்ரோன் தொழில்நுட்ப பயன்பாடு மற்றும் தொழில்நுட்பம் தொடர்பாக தென்கிழக்கு, களனி பல்கலைக்கழக புவியியல்துறை மாணவர்களுக்கு விரிவான செயல்முறை பயிற்சி வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், களனி பல்கலைக்கழக சமூக விஞ்ஞான பீடத்தின் புவியியல்துறை தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் லால் மர்வின் தர்மசிறி, பேராசிரியர் ஏ.ஜி. அமரசிங்க, சிரேஷ்ட பேராசிரியர் எம். ஐ.எம். கலீல், சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எல். பௌசுல் அமீர், கலாநிதி றபீகா அமீர்டீன் , சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எச். முகம்மட் றினோஸ், விரிவுரையாளர் ஐ.எல். முகம்மட் சாஹிர், விரிவுரையாளர் ஏ.எல். ஐயூப், விரிவுரையாளர் எம். என். நுஸ்கா பானு, விரிவுரையாளர் எம். எச். பாத்திமா நுஸ்கியா, சிரேஷ்ட உதவி பதிவாளர் எம். ரீ. அகமட் அஷ்ஹர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு உதவும் நோக்குடன் மூதூர் பிரதேச செயலகத்தினால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு இலவச கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்படுவதை படத்தில் காணலாம். (படங்கள் ;தோப்பூர் தினகரன் நிருபர்)

# வடக்கின் உதயம்

## அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை;
## அத்துமீறி நுழைந்து பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது தாக்குதல்

**(கரவெட்டி தினகரன் நிருபர்)**

யாழ்ப்பாணம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இரவு மதுபோதையில் அத்துமீறி நுழைந்த வன்முறை கும்பலொன்று கடமையிலிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பி சென்றுள்ளது.

அதேவேளை பாதுகாப்பு உத்தியோகத்தரின் அலுவலக ஜன்னல் கண்ணாடிகளையும் அடித்து உடைத்து சேதப்படுத்தியுள்ளனர். அவர்களை மடக்கி பிடிக்க முற்பட்டவர்களையும் தகாத வார்த்தைகளால் பேசி, அவர்களையும் தாக்க முற்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பஸ்சில் பெண்களிடம் சில்மிஷம்; இருவர் கைது

யாழ்ப்பாணத்தில் பஸ்சில் பெண்களுடன் தவறாக நடந்து கொண்ட குற்றச்சாட்டில் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்ட பயணிகள் பஸ்சில் பொதுமக்களுடன் பயணம் செய்த பொலிஸ் புலனாய்வாளர்கள் இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் அராலி பகுதியை சேர்ந்த 22 மற்றும் 24 வயதுடைய இளைஞர்கள் எனவும் அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

**(யாழ்.விசேட நிருபர்)**



யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு கூட்டம், ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோரின் பங்கேற்புடன் யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இக்கூட்டத்தில், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், திணைக்களத்தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், பாதுகாப்பு தரப்பினர் என பலரும் கலந்துகொண்டனர்.

## 10 வயது சிறுமி படுகொலை தோட்ட பணியாளர் கைது



**(மன்னார் குறூப், தலைமன்னார் விசேட நிருபர்கள்)**

தலைமன்னார் கிராமத்தில் 10 வயது சிறுமியொருவர் நேற்று முன்தினம் (15) இரவு பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். தலைமன்னார் கிராமம் பகுதியில் தோட்டமொன்றை பராமரிப்பதற்காக பணியமர்த்தப்பட்ட நபரொருவராலேயே சிறுமி கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

சந்தேகநபர் போதைக்கு அடிமையானவர் என்பதால் மனைவி அவரை விட்டு பிரிந்து சென்றுள்ளதாகவும் அவர் தற்போது தலைமன்னார் பகுதியில் வசித்து வருவதாகவும் தெரியவருகின்றது. இந்நிலையில் அருகிலிருக்கும் தாயொருவர் சந்தேகநபருக்கு உணவு வழங்கி நட்பாக பழகி வந்துள்ளார். இந்நிலையில் சந்தேகநபர் நேற்றைய தினம் மாலை உணவு வழங்கும் தாயின் பேத்தியான சிறுமியை கடைக்கு அழைத்து சென்றுள்ளதாக தெரியவருகின்றது. இதனையடுத்தே சிறுமி காணாமல் போயுள்ளதாக தெரியவருகின்றது.

இந்நிலையில் அருகிலிருந்த CCTV கெமராக்களின் உதவியுடனும் ஊர் மக்களின் உதவியுடனும் மேற்கோண்ட தேடுதலின் போது சிறுமியின் சடலம் நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் தலைமன்னார் பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையின் 2023ஆம் ஆண்டு புலமைப்பரிசில் சாதனை மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் பிரியாவிடை நிகழ்வும் அண்மையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலை பழைய மாணவரும் லண்டனைச் சேர்ந்த பொறியியலாளருமான சு.சபேசன் கலந்து சிறப்பித்தார்.
(படம் : சாவகச்சேரி விசேட நிருபர்)

## முத்துஜயன் கட்டு குளத்தின் கீழான சிறுபோக பயிர்செய்கைக்கான நீர் திறப்பு



**(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**

முத்துஜயன் கட்டு குளத்தின் கீழான சிறுபோக பயிர்ச்செய்கைக்கான நீர் நேற்று திறந்துவிடப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் முத்துஜயன் கட்டுகுளத்தில் இம்முறை போதியளவு நீர் சேமிக்கப்பட்டுள்ளதால் குளத்தின் கீழான சிறுபோக பயிர்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இந்நிலையில் சிறுபோக பயிர்செய்கைக்கான பொதுக்கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்று நீர் வழங்குவதற்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் குளத்தின் நீர் விவசாய செய்கைக்காக திறந்துவிடப்பட்டுள்ளது.

நேற்று முதல் எதிர்வரும் 31.08.2024 ஆம் திகதி வரை திறந்து விடப்படவுள்ளது. உப உணவு செய்கையாளர்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் நீரை பெற்றுக்கொள்ள இம்முறை வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4522 ஏக்கரில் இம்முறை விவசாய செய்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் நெற்பயிர் செய்கைக்காக 3684 ஏக்கரும் உப உணவு பயிர்ச்செய்கைக்காக 828 ஏக்கரும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

குளக்கட்டுபிள்ளையார் ஆலயத்தில் பொங்கல் பொங்கி பூஜை வழிபாடுகளை தொடர்ந்து குளத்திக்கொட்டில் நடைபெற்ற வழிபாடுகளுடன் நீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

## மாணவிகளை துஷ்பிரயோகத்துக்குட்படுத்த முயன்ற பாடசாலை ஆசிரியர் கைது

ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட வட்டவளையில் தமிழ் பாடசாலையொன்றில் பாடசாலை மாணவிகள் மூவரை துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்த அதே பாடசாலை விஞ்ஞான ஆசிரியர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இப்பாடசாலையில் விஞ்ஞான ஆசிரியராக இவர் சுமார் 5 வருடங்கள் கடமையாற்றி வருவதாக தெரியவருகின்றது.



ஆசிரியர் பாடசாலையில் பத்தாம் வகுப்பு படிக்கும் மூன்று சிறுமிகளை துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்ததாகவும், அவர்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பி அசௌகரியம் ஏற்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அந்த செய்திகளுக்கு பதில் அளிக்காததால், வகுப்பறையில் அமர்ந்திருந்த மாணவிகள் மீது தேவையற்ற அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டதால் சம்பந்தப்பட்ட மாணவிகள் வட்டவளை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதன்படி, வட்டவளை பொலிஸாரால் 44 வயதுடைய சந்தேகநபரான ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் ஹற்றன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

## வட்டவளையில் மலைப்பாம்புகள் நடமாட்டம் அதிகரிப்பு

**(கினிகத்தேனை தினகரன் நிருபர்)**

வட்டவளை தியகல அடர்ந்த காட்டுப்பகுதிகளில் மலைப்பாம்புகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனை இப்பகுதியில் வாழும் மக்கள் அவதானித்துள்ளனர். குறிப்பாக விறகு சேகரிப்பதற்காகவும், பால் சேகரிப்பதற்கு காட்டுப்பகுதியில் செல்வோரும் அவதானித்துள்ளனர்.

மலை பாம்புகள் இப்பிரதேசத்தில் பல இடங்களில் சஞ்சரிப்பதால் மக்கள் மத்தியில் ஒரு அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# மலைச்சாரல்



வெலிமடை வார்விக் தோட்டத்திலுள்ள அனைத்து பிரிவுகளுக்கும் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷ் விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார். இதன்போது பிரதேச எதிர்கால அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் நிர்வாகத்தின் முகாமைத்துவ செயற்பாடுகளில் நிலவும் குறைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

## ஹற்றனில் இன்று உலகசாதனை 12 மணிநேர தொடர் இசை நிகழ்ச்சி



ARS INTERNATIONAL ORCHESTRA வழங்கும் உலகசாதனையை நோக்கிய 12 மணிநேர தொடர் இசை நிகழ்ச்சி இன்று ஹற்றனில் நடைபெறவுள்ளது.

முற்றிலும் இலவசமாக நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சி தொடர்பான ஊடக சந்திப்பு நேற்று மாலை கொழும்பில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய ARS INTERNATIONAL ORCHESTRA வின் தலைவரும் ஸ்தாபகருமான டொக்டர் Rashmi Roomi கருத்து தெரிவிக்கையில்,

பாடுவோர் பாடலாம் என்ற இசை நிகழ்ச்சி பெப்ரவரி 17 ஆம் திகதி ஹற்றன் நகரில் நடைபெறவுள்ளது.

அதற்கான சகல விதமான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு மாதங்களாக பல கட்ட குரல் தேர்வுகள் இடம்பெற்றதுடன் அதிலிருந்து 50 பாடக பாடகிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்கும் சகலருக்கும் சான்றிதழ்களும் முதல் மூன்று இடங்களை பிடிப்போருக்கு பெறுமதியான பரிசுகளும் வழங்கப்படும்.

## சிவனொளிபாத மலை பருவ காலம் ஆரம்பம்! பலாங்கொடையிலிருந்து விசேட பஸ் சேவை



**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

புனித சிவனொளிபாத மலை யாத்திரை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அங்கு செல்லும் பக்தர்களின் நலன்கருதி பலாங்கொடையிலிருந்து புதிய பஸ் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பலாங்கொடையில் ஆரம்பித்து பொகவந்தலாவை நோட்டன் பிரிட்ஜ் வழியாக நல்லதண்ணி வரை பயண முடிவை கொண்டிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 26 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்ட இப்பஸ் சேவை வாரத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பலாங்கொடையிலிருந்து சிவனொளிபாத மலை யாத்திரை நிறைவு பெறும் வரை சேவையில் ஈடுபடுமென இலங்கைப் போக்குவரத்து சபை கிளை முகாமையாளர் தர்ம ஸ்ரீ ஹரிச்சந்திர நேற்று தெரிவித்தார்.

இதன் பிரகாரம் பிரதி வெள்ளிக்கிழமையும் பி.ப. 4.30 மணிக்கு தனது பயணத்தை ஆரம்பிக்கும் இப்பஸ் சேவை இரவு 8 மணியளவில் பயணத்தை நிறைவு செய்யும் அதேவேளை அடுத்த நாள் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லதண்ணியில் பயணத்தை ஆரம்பித்து பி.ப 12.30 மணியளவில் பலாங்கொடையில் பயணத்தை நிறைவு செய்யுமெனவும் அவர் தெரிவித்தார்.

## கெட்புலா உச்சிமலை முத்துமாரியம்மன் பால்குட பவனி



**(ஹற்றன் விசேட நிருபர்)**

நாவலப்பிட்டி கெட்டபுலா உச்சி மலை (பார்கேபல்) கீழ் பிரிவு முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் இரண்டாம் வருட சங்காபிஷேகமும் பால்குட பவனியும் நேற்றுமுன்தினம் மிக சிறப்பாக நடைபெற்றது.

விநாயகர் வழிபாடு அக்கினி பூஜை, திரவ்விய ஹோமம் ஆகியன நடைபெற்று அதனை தொடர்ந்து பால்குட பவனி மிக சிறப்பாக நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்து அம்பாளுக்கு பாலாபிஷேகம், அலங்கார அபிஷேகம் என்பன இடம்பெற்று அம்பாள் வெளி வீதி, உள் வீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

அதனைத்தொடர்ந்து மகேஸ்வர பூஜையுடன் விழா நிறைவு பெற்றதுடன் வருகை தந்த பக்த அடியார்களுக்கு விபூதி பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டன.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வசந்த சர்மா தலைமையில் புஸ்ஸல்லாவ கதிர்வேலாயுத சுமாமி ஆலய சிவஸ்ரீ வித்யாரூபன் சர்மாவினால் பூஜை வழிபாடுகள் செய்யப்பட்டன.

# தினகரன் வர்த்தக உலா



இலங்கையின் 2ஆவது மிகப் பெரும் ஆயுள் காப்புறுதி நிறுவனமான Softlogic Life, 'Softlogic Life Tech Wizards' என்ற மூலோபாய திட்டத்தின் கீழ் மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் கணனி விஞ்ஞானம் மற்றும் பொறியியல் துறையுடன் ஒத்துழைக்கும் முதல் காப்புறுதி நிறுவனமாக மாறியுள்ளது. இது தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) அண்மையில் கைச்சாத்திடப்பட்டது. இதில் Softlogic Life முகாமைத்துவ பணிப்பாளர் இப்திகார் அஹமட், Softlogic Life இன் பிரதம டிஜிட்டல் புத்தாக்க அதிகாரி சாரங்க விஜயரத்ன, பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் N. D. குணவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

## Anesthesiologists கல்லூரிக்கு Diamond அனுசரணையாளராகும் Sunshine Medical Devices

*Sunshine Healthcare Lanka*வின் ஒரு பிரிவான *Sunshine Medical Device*, இலங்கையின் *Anesthesiologists* நிபுணர்கள் மற்றும் தீவிர சிகிச்சை நிபுணர்கள் கல்லூரியால் ஏற்பாடு செய்யப்பட்ட, சமீபத்தில் முடிவடைந்த 40வது வருடாந்த கல்விக் காங்கிரஸின் *Diamond* அனுசரணையாளராக கூட்டுசேர்ந்தது.

கொழும்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக *RCOA (UK)* இன் துணைத் தலைவர் டொக்டர் ஹெல்ஜி ஜோஹன்னசன் மற்றும் கௌரவ விருந்தினராக ஐக்கிய இராச்சிய தேசிய சுகாதார சேவையின் *(NHS)* விமர்சன மற்றும் அறுவை சிகிச்சை பராமரிப்புக்கான தேசிய மருத்துவ பணிப்பாளர் பேராசிரியர் ரமணி முனசிங்க உள்ளிட்ட புகழ்பெற்ற மருத்துவ நிபுணர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் போது, ஆலோசகர்கள், பதிவாளர்கள், மருத்துவ அதிகாரிகள் மற்றும் கிராமப்புற மருத்துவமனை ஆலோசகர்களிடையே உரையாடல் மற்றும் ஒத்துழைப்பை வளர்ப்பதில் *Sunshine Medical Devices* முக்கிய பங்கு வகித்தன. நிறுவனச் சாவடி ஒத்துழைப்புக்கான மையப் புள்ளியாகச் செயல்பட்டது மற்றும் சன்ஷைனின் பல்வேறு வகையான தயாரிப்புகளை ஆராய்ந்து புரிந்துகொள்வதற்கான வாய்ப்பை மருத்துவ நிபுணர்களுக்கு வழங்கப்பட்டது. ஆலோசகர்கள் சன்ஷைனின் தயாரிப்பு போர்ட்ஃபோலியோவில் ஆர்வத்தை வெளிப்படுத்தினர், இதில் *Airway Management* தயாரிப்புகள், *Pain Management* தயாரிப்புகள், *Hyperthermia Management* தயாரிப்புகள், *Secretion Management* தயாரிப்புகள், மருந்து மற்றும் *Infusion* விநியோக அமைப்புகள் மற்றும் *Blood Gas Analyzers* ஆகியவை அடங்கும்.

மதிப்புமிக்க விவாதங்கள் மற்றும் தொழில்முறை ஒத்துழைப்புகளை எளிதாக்குவதன் மூலம், சன்ஷைன் அவர்களின் புத்தாக்கமான தீர்வுகளை காட்சிப்படுத்தியது மட்டுமல்லாமல் மருத்துவ சமூகத்தின் குறிப்பிட்ட தேவைகள் பற்றிய நுண்ணறிவுகளையும் பெற்றது. இலங்கையில் சுகாதாரப் பாதுகாப்புத் துறையை உயர்த்துவதற்கான அவர்களின் அர்ப்பணிப்புக்கு சான்றாக, *Sunshine Medical Devices*, தொழில்துறை அறிவைப் பகிர்ந்துகொள்வதன் மூலமும், மருத்துவ நிபுணர்களுடன் சாத்தியமான ஒத்துழைப்பை ஆராய்வதற்காக நிபுணர்களிடையே பிரத்தியேகமான தொடர்புகளைத் ஏற்படுத்துவதன் மூலமும் நம்பிக்கைக்குரிய வழிகளைத் தொடரவுள்ளது.



## 5 அடுக்குமாடித் தொகுதி கட்டமைப்பு நிறைவை கொண்டாடும் Marina Square – Uptown Colombo

இலங்கையின் முதன்மையான, துறைமுகம் முன்பான சொகுசான, கலப்பு மேம்பாட்டுத் திட்டமான *Marina Square – Uptown Colombo*, 5 அடுக்குமாடித் தொகுதி கட்டமைப்பின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக, கடந்த 2024 ஜனவரி 30ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வில் அறிவிக்கப்பட்டுள்ளது.

வியாபார தொழில்துறை வலுவானவர்களான *Access Engineering PLC* மற்றும் *China Harbour Engineering Company (CHEC)* ஆகியவற்றின் ஆதரவுடன், சவால்மிக்க இரண்டு ஆண்டுகளில் இந்த குறிப்பிடத்தக்க இலக்குகளை அடைந்துள்ளது. இது இத்திட்டத்திற்கான கூட்டு பங்குதாரர்களின் உறுதியான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய *Access Engineering PLC* நிறுவனத்தின் நிறைவேற்று பிரதித் தலைவர் திரு. *Christopher Joshua*, இந்த இலக்குகளை தொடர்பிலும், விவேகமான வீட்டு உரிமையாளர்களுக்காக *Marina Square* கொண்டுள்ள ஆற்றலின் முக்கியத்துவத்தையும் இங்கு சுட்டிக்காட்டினார். இந்தத் தொழில்துறையை முடக்கிய நெருக்கடியைத் தொடர்ந்து, ஐந்து அடுக்குமாடித் தொகுதி கட்டுமானத்தைக் கொண்ட இந்த கட்டமைப்பை நிறைவு செய்தமை ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். அத்துடன் எமது உறுதியான அர்ப்பணிப்பே இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதற்கான ஒரு



சான்றாக விளங்குகின்றது. இந்த இலக்குகளின் சாதனையானது, *MEP* இல் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஏனைய பணிகள் மற்றும் நிறைவு செய்யப்பட்ட கட்டுமானங்கள் ஆகியன, 2025 ஆம் ஆண்டின் இறுதியில் முழுமையாக அதனை நிறைவு செய்வதற்கான பயணத்தின் திட்டத்தை சிறப்பாக வழி நடத்துகிறது." என்றார். இரு நிறுவனங்களின் பங்குதாரர்களின் பிரதிநிதிகள், திட்ட ஆலோசகர்கள், ஒழுங்குபடுத்தும் நிறுவன அதிகாரிகள் உள்ளிட்ட பல உயரதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டதோடு, அதன் *Reartower* மாடி முகப்பில் ஒரு விருந்தளிப்பு நிகழ்வும் இங்கு இடம்பெற்றது.

## தமது வர்த்தகநாம தூதராக ஸ்டெபனி சிறிவர்தனவை நியமித்துள்ள Pure Gold by Tiesh

தனது ஒப்பற்ற கைவினைத்திறன் மற்றும் காலத்திற்கு பொருத்தமான வடிவமைப்பு ஆகியன காரணமாக அங்கீகாரம் பெற்ற ஒரு புகழ்பெற்ற நகை வர்த்தகநாமமான *Pure Gold by Tiesh* (தியேஷ்), உலகளாவிய ரீதியில் அங்கீகாரத்தைக் கொண்ட பிரபலமும், பன்முகக் கலைஞருமான ஸ்டெபனி சிறிவர்தனவை தமது வர்த்தகநாம தூதராக நியமித்துள்ளதை பெருமையுடன் அறிவித்துள்ளது. 18 கரட் மற்றும் 22 கரட் தங்க நகைகளின் வரிசைகளுக்கு பெயர் பெற்ற *Pure Gold by Tiesh*, நேர்த்தியான கைவினைத்திறன் மற்றும் வடிவமைப்பின் கலங்கரை விளக்கமாக திகழ்கின்றது. இந்த வர்த்தகநாமமானது, பல்வேறு விதமான ஒப்பற்ற காதணிகள், நெக்லஸ்கள், வளையல்கள், மோதிரங்கள் உள்ளிட்டவற்றைக் வெளியிட்டு வருகிறது.





இவை யாவும் நேர்த்தி, தனித்துவம் கொண்டவையாக, ரோஸ் கோல்ட், வெள்ளை தங்கம், மஞ்சள் தங்கம் ஆகிய மூன்று வண்ணங்களில் கிடைக்கின்றன.

## காலநிலை மாற்ற விழிப்புணர்வுக்காக கொழும்பு வந்த Greenpeace இன் Rainbow Warrior கப்பல்

*Greenpeace* தனது கொழும்பில் உள்ள தெற்காசிய பிராந்திய அலுவலகத்தை, *Rainbow Warrior* எனும் பிரபல கப்பலின் வருகையுடன் ஆரம்பித்துள்ளது. இது எதிர்வரும் 6 நாட்களுக்கு மிகவும் எதிர்பார்க்கப்படும் *'People For Climate Greenpeace Indian Ocean Ship Tour 2024'* (காலநிலைக்காக மக்கள் *Greenpeace* இந்து சமுத்திர கப்பல் பயணம் 2024) எனும் பயணத்தின் ஆரம்பத்தைக் குறிக்கிறது. 2024 பெப்ரவரி 13ஆம் திகதி *Rainbow Warrior* கப்பலில் இடம்பெற்ற இதன் ஆரம்ப விழாவானது, தெற்காசிய பிராந்தியத்தில் கூட்டு முயற்சியை வலியுறுத்தல், பொறுப்புக்கூறல், மீளெழுச்சி ஆகியவற்றை மையமாகக் கொண்ட ஒரு எடுத்துக்காட்டான பயணத்திற்கு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.





இந்த கப்பலின் வரவேற்பு விழாவானது, ஒன்றிணைவு மற்றும் ஒத்துழைப்பின் உற்சாகமான கொண்டாட்டமாக அமைந்திருந்தது. இலங்கையின் அழகிய பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வசீகரிக்கும் கலாசார நிகழ்ச்சிகளும் இங்கு இடம்பெற்றன. இந்த விழாவில் முக்கிய விருந்தினர்கள், அதிகாரிகள், பிரபலங்கள், செல்வாக்குமிக்கவர்கள், சபை உறுப்பினர்கள் மற்றும் காலநிலை மாற்றத்தை சமாளிக்கும் பணிக்காக *Greenpeace* உடன் இணைந்துள்ள கூட்டாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சுற்றுச்சூழல் ஆர்வலரும் *Greenpeace South Asia* உறுப்பினருமான ஜெஹான் கனகரத்ன இங்கு கருத்து வெளியிடுகையில், "காலநிலை மாற்றத்தினால் இலங்கையில் எமது விவசாயம் மற்றும் வாழ்வாதாரம் சீர்குலைந்து சூழல் நெருக்கடியை நாம் அனுபவித்து வருகிறோம். தெற்காசியாவில் உயிர்ப் பல்வகைமை பெருக்கத்தின் முக்கிய இடம் எனும் வகையில், காலநிலை மாற்ற பாதிப்பில் செல்வாக்குச் செலுத்துவதில் எமது பங்கு குறைந்தபட்சமாக உள்ள போதிலும், நாம் சமனற்ற வகையில் பாதிக்கப்படுகிறோம். *Greenpeace South Asia* மற்றும் ஏனைய உள்ளூர் சூழல் இயக்கங்களுடன் இணைந்து, இலங்கையில் ஒரு தனியான காலநிலை மாற்ற அடித்தளத்தை ஏற்படுத்துவதற்காக பாடுபடுவது எமக்கு ஒரு இன்றியமையாத விடயமாக காணப்படுகின்றது." என்றார்.

## நாட்டிற்கு பணத்தை அனுப்ப முதல் தெரிவாக இடம்பிடித்த DFCC Remittances

வெளிநாட்டில் வதியும் இலங்கையர்கள் தங்குதடையின்றி, பாதுகாப்பாக, விரைவாக மற்றும் கட்டுபடியான கட்டணங்களுடன் இலங்கைக்கு பணத்தை அனுப்புவதற்கான சேவையை *DFCC Remittances* தீர்வு தொடர்ந்தும் சிறப்பாக வழங்கி வருகின்றது. சர்வதேச நாடுகளிலுள்ள இலங்கைச் சமூகத்தினர், இலங்கையிலுள்ள தமது அன்பிற்குரியவர்களுக்கு சிரமமின்றி பணத்தை அனுப்பி வைப்பதற்கு இடமளிக்கும் வகையில் அவர்களுக்கு சௌகரியமான நிதித் தீர்வுகளை வழங்குவதில் *DFCC* வங்கியின் அர்ப்பணிப்பை இது பிரதிபலிக்கின்றது. 11 கூட்டாளர்கள் வங்கிகளுடன் இணைந்து செயல்பட்டு, உள்நாட்டு வங்கிக் கணக்குகளுக்கு நிகழ்நேரத்தில் விரைவாகவும், பாதுகாப்பாகவும் பணத்தை நேரடியாக அனுப்புவதை *DFCC Remittances* உறுதி செய்கின்றது.

தற்போது சர்வதேசம் எங்கிலும் நன்மதிப்புடைய பணப்பரிமாற்ற நிறுவனங்களின் கூட்டாண்மை மூலமாக தனது சேவைகளை மேலும் பல நாடுகளுக்கும், இடங்களுக்கும் *DFCC Remittances* விஸ்தரித்து வருகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில், பணத்தைப் பெற்றுக்கொள்பவர்கள் டிஜிட்டல்ரீதியாகவும், நேரடியாகவும் அல்லது தமது டெபிட் அட்டைகளை உபயோகித்து அவற்றை சௌகரியமாகப் பெற்றுக்கொள்ள ஏதுவாக நிகரற்ற வகையில் *LankaPay* ஏடிஎம் மையங்களினூடாக பெற்றுக்கொள்ளும் வகையில் நாடெங்கிலும் பல்வேறு இடங்களில் தனது உள்நாட்டுப் பிரசன்னத்தின் அனுகூலத்தைச் சிறப்பாக உபயோகித்து வருகின்றது.

வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்கள் மற்றும் இலங்கையிலுள்ள அவர்களது குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றும் வகையில், விசேடமாக வடிவமைக்கப்பட்ட கடன் திட்டங்கள் மற்றும் ஏனைய நிதிச் சேவைகளை தனது சேவை மூலமாக பணத்தை அனுப்பி வைக்கின்ற வாடிக்கையாளர்களுக்கு *DFCC Remittances* வழங்கி வருகின்றது.

## கழிவு சேகரிப்பாளர் தனது குடும்ப வரலாற்றை மீண்டும் பதிவு செய்கிறார்

வாழ்க்கையின் மதிநுட்பமான பயணம் எனும் ஓட்டத்தில், கஷ்டங்கள் பெரும்பாலும் கனவுகளை மூழ்கடிக்கும், இந்த நிலையில் மஞ்சுளா ராமலிங்கத்தின் கதை, மிகவும் சாத்தியமில்லாத இடங்களில் இருந்து வெளிப்படும் நெகிழ்ச்சிக்கு ஒரு சான்று. "17 வயதில் திருமணம், 18 வயதில் ஒரு தாய் கனவுகளை விட அதிக சுமை" என்று அவர் யோசிக்கிறார், முதிர்வயதுக்கான தனது பயணத்தின் ஆரம்ப அத்தியாயங்களை நினைவுபடுத்துகிறார். பல தசாப்தங்களுக்குப் பிறகு, சவால்கள் தொடர்கின்றன, ஆனால் அவருடைய மகளை அவர்களின் முழு குடும்பத்திலும் முதல் மருத்துவராக்கும் பாதையிலிருந்து எதுவும் அவரைத் தடுக்கவில்லை. தனிப்பட்ட சோதனைகளின் அகலத்தை விரிவுபடுத்தும் ஒரு கதையில், மஞ்சுளா தளராத உறுதியுடன் துன்பங்களை எதிர்கொண்டார். 1 கோடி கடன் மற்றும் கடன்காரர்களின் இடைவிடாத தொந்தரவு ஆகியவை அவரது ஆரம்ப காலத்தை உள்ளடக்கியிருந்தது. எவ்வாறாயினும், இந்த சவால்களுக்குள், புரட்சிகரமான மாற்றத்திற்கான களத்தை அமைக்கும் ஒரு பின்னடைவை அவர் கண்டுபிடித்தார், அதே நேரத்தில் இலங்கையின் தற்போதைய மற்றும்



வளர்ந்து வரும் பிரச்சினைகளில் ஒன்றான தவறாக நிர்வகிக்கப்படும் கழிவுகளுக்கு ஒரு தீர்வை கண்டறிந்தார்!

உள்நாட்டில் தேங்கி நிற்கும் கழிவுகளின் எடையால் இலங்கை போராடுகிறது தினமும் 9,000 மெட்ரிக் தொன் திடக்கழிவு உற்பத்தி செய்யப்படுகிறது, இது ஒவ்வொரு ஆண்டும் 1.2% அதிகரித்து வருகிறது. சுற்றுச்சூழல் சீரழிவு, சுகாதார அபாயங்கள் மற்றும் சமூக சவால்களில் வெளிப்படும், வெறும் புள்ளிவிவரங்களுக்கு அப்பாற்பட்ட விளைவுகள். கழிவுகளை முறையற்ற முறையில் அகற்றுவது, குறிப்பாக பிளாஸ்டிக், குறிப்பாக கவலைக்குரிய பிரச்சினையாக இருந்துவருவதுடன் குப்பைகள் ஒரு இடத்தில் தேங்கி இருப்பது, விலைமதிப்பற்ற நீர் நிலைகளை மாசுபடுத்துகிறது மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளை அச்சுறுத்துகிறது.

## இலங்கையில் முதற்தடவையாக நடைபெறும் லெஜன்ட்ஸ் கிரிக்கெட் கிண்ண தொடர்

கிரிக்கெட்டில் சிகரம் தொட்டு லெஜன்ட்களாக வர்ணிக்கப்படும் பல நாடுகளைச் சேர்ந்த வீரர்களை முதற்தடவையாக இலங்கையில் ஒன்றாக களம் காணச் செய்யும் லெஜன்ட்ஸ் வெற்றிக்கிண்ண சுற்றுத்தொடர் மார்ச் எட்டாம் திகதி கண்டியில் உள்ள பள்ளேகல மைதானத்தில் ஆரம்பமாகிறது. இந்த சுற்றுத்தொடருக்குரிய போட்டிகள் தொடர்ந்து 14 நாட்கள் நடைபெறும். இந்த சுற்றுத்தொடர் கடந்த ஆண்டு டெல்லியில் அறிமுகம் செய்யப்பட்டு சிறப்பாக நடந்து முடிந்தது. இம்முறை வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கிக் கொள்வதற்காக, நட்சத்திரங்களாகத் திகழ்ந்து ஓய்வு பெற்ற கிரிக்கட் வீரர்கள் ஏழு அணிகளாக களமிறங்குகிறார்கள்.

இந்த சுற்றுத்தொடர் LCT T20 League Pvt Limited நிறுவனத்தால் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் பாகிஸ்தான், இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த நட்சத்திர வீரர்கள் ஏழு அணிகளில் இடம்பெறுவார்கள். இந்தத் தகவல்கள் வீரர்களை அணிகளாக பிரித்து, வெற்றிக்கிண்ண சுற்றுத்தொடரின் ஜெர்சியை வெளியிடும் வைபவத்தில் வெளியிடப்பட்டன. கொழும்பு ஹில்ட்டன் ஹோட்டலில் வைபவம் நடைபெற்றது. முன்னாள் கிரிக்கட் வீரர் பர்வீஸ் மஹ்ரூப் அணிகளுக்கு வீரர்களை



பிரித்தொதுக்கும் நடைமுறையை வழிநடத்தினார். இதில் சமிந்த வாஸ், திஸர பெரேரா ஆகியோரும் இணைந்திருந்தார்கள். ஏழு அணிகளாக பிரித்து ஒதுக்கப்பட்ட வீரர்களில் யுவராஜ் சிங், கிரிஸ் கெயில், சுரேஷ் ரெய்னா, பென் டங்க், ரொஸ் ரெயிலர், ஜொஹான் போத்தா, ஹர்பஜன் சிங், ஷஹீட் அப்ரிடி, கம்ரான் அக்மல், சனத் ஜயசூரிய, மிஸ்பா உல் ஹக், அம்பாட்டி ராயுடு, ட்வெயின் ப்ராவோ, திஸர பெரேரா, இம்ரான் தாஹிர் ஆகியோரும் அடங்குகிறார்கள். இந்த வீரர்கள் ராஜஸ்தான் கிங்ஸ், டெல்லி டெயார் டெவில்ஸ், பஞ்சாப் ரோயல், கெண்டி வோரியர்ஸ், கொலம்போ லயன்ஸ், நிவ்யோர்க் சுப்பர் ஸ்டார் ஸ்ட்ரைக்கர்ஸ், டுபாய் ஜயன்ட்ஸ் ஆகிய அணிகளில் விளையாடுவார்கள்.

## புரத தினம் 2024: இவ்வருடத்தின் எண்ணக்கரு 'புரதம் மூலம் தீர்வு' என அறிவித்துள்ள 'Right To Protein'

தனது 5ஆவது ஆண்டில் காலடி வைத்துள்ள *ProteinDay*, போசணை பாதுகாப்பில் புரதத்தின் முக்கிய பங்கு பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கவும், பொதுமக்களுக்கான சுகாதார தீர்வுகளாக புரதம் நிறைந்த உணவுகளை அணுகுவதை மேம்படுத்தவும் தனிநபர்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழில்துறை தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கின்றது.

*U.S. Soybean Export Council (USSEC)* மூலம் செயற்படுத்தப்படும் *'Right To Protein'* திட்டமானது, அதன் ஐந்தாவது ஆண்டைக் கொண்டாடும் வகையில், *'Solve With Protein'* (புரதம் மூலம் தீர்வு) எனும் தலைப்பை, 2024 பெப்ரவரி 27ஆம் திகதி கொண்டாடப்படும் புரத தினத்திற்கான கருப்பொருளாக அறிவித்துள்ளது. இந்தியா மற்றும் தெற்காசியா முழுவதும் உள்ள பொதுமக்கள், புரத உணவுகளை அணுகக்கூடிய வகையில் வழங்குதல், புரதம் நிறைந்த உணவுகளுக்கான அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்ய, தனிநபர்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழில்துறை தலைவர்களை ஒன்றிணைக்க, இந்த பிரசாரம் அழைப்பு விடுக்கிறது.

புரதமானது, ஒரு அத்தியாவசிய பெரும் போசணை உணவு எனும் புரிதல் இல்லாமை காரணமாக, போதியளவான புரதத்தை மக்கள் எடுத்துக் கொள்வதில்லை என்பதைக் காணக் கூடியதாக உள்ளது. *'Solve With Protein'* (புரதம் மூலம் தீர்வு) எனும் 2024 புரத தினத்தின் எண்ணக்கருவானது, ஆரோக்கியமான மற்றும் அதிக நெகிழ்வுத் தன்மை கொண்ட மக்களை உருவாக்குவதில் புரதத்தின் முக்கிய பங்கு பற்றிய செய்தியை பரப்புமாறு, வர்த்தகநாமங்கள், சிந்தனையாளர்கள், சமூகம் மற்றும் ஆரோக்கியத்தில் செல்வாக்கு செலுத்துபவர்கள், ஊடகங்கள் மற்றும் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கிறது.

## கடந்த ஆண்டின் மீளாய்வு: 2023 இல் இலங்கையில் Uber தளத்தின் செயற்பாடுகள்

2023 ஆண்டிற்கான தனது செயல்பாடுகள் தொடர்பான மீளாய்வை 'இலங்கையில் Uber எவ்வாறு செயல்பட்டுள்ளது' என்ற தனது வருடாந்த புள்ளிவிபரங்கள் அறிக்கை மூலமாக அது வெளியிட்டுள்ளதுடன், கடந்த ஆண்டில் இலங்கையில் தனது பிரயாண சேவை தொடர்பான முக்கிய போக்குகளை இதில் உள்ளடக்கியுள்ளது. 2023 இல் மேற்கொள்ள சவாரிகள் தொடர்பான பகுப்பாய்வு, ஒவ்வொரு நகரத்திலும் Uber சவாரிகள் மூலமாக உள்ளடக்கப்பட்ட மொத்த கிலோமீட்டர் எண்ணிக்கை தொடர்பான போக்குகள், நகரங்களுக்கு இடையிலான பிரபலமான பிரயாண போக்குகள் மற்றும் சவாரி செய்பவர்களின் பல்வேறுபட்ட முன்னுரிமைத் தெரிவுகள் ஆகியன இந்த அறிக்கை மூலமாக வெளிப்பட்டுள்ளன. புள்ளி விபரங்கள் மற்றும் நுண்ணறிவு ஆகியவற்றின் துணையுடன், இலங்கையில் சவாரிப்பகிர்வு முறைமையை நாடுவது அதிகரித்து வருவது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டில் சவாரி செய்பவர்களின் அபிமானம் பெற்ற தெரிவாக Uber தொடர்ந்தும் காணப்படுவதுடன், பல்வேறுபட்ட சவாரித் தெரிவுகள் மீது சவாரி செய்பவர்கள் காண்பித்த அபிமானமும் வெளிப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் 140 மில்லியன் கிலோமீட்டர் என்ற பாரிய எண்ணிக்கையில் மொத்த சவாரிகளும் இடம்பெற்றுள்ளதுடன், இது இலங்கையிலுள்ள ஒட்டுமொத்த வீதி வலையமைப்பின் 114,000 கிலோ மீட்டர் தூரத்தைக் கருதுகையில், 1,200 க்கும் மேற்பட்ட தடவைகள் அல்லது தினந்தோறும் மூன்றுக்கும் மேற்பட்ட தடவைகள் இலங்கையிலுள்ள ஒட்டுமொத்த வீதி வலையமைப்பையும் கடப்பதற்கு ஈடானதாக கருத முடியும்.

Uber Tuk மற்றும் Uber Zip ஆகியன நாட்டில் தொடர்ந்தும் பிரபலமான சேவை வகைகளாக காணப்பட்டதுடன், இரண்டுக்கும் இடையில் பலத்த போட்டி நிலவியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## லங்கா பிரீமியர் லீக் தொடர் ஜூலையில்



ஐந்தாவது லங்கா பிரீமியர் லீக் தொடர் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. ஐந்து அணிகள் பங்கேற்கும் இந்தத் தொடரில் மொத்தம் 24 போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதன் முதல் சுற்றில் 20 போட்டிகள் நடைபெறவிருப்பதோடு இறுதிச் சுற்றில் நான்கு போட்டிகள் நடைபெறும்.

இலங்கையின் முன்னணி டி20 லீக் தொடரான லங்கா பிரீமியர் லீக் தொடரில் வனிந்து ஹசரங்க தலைமையிலான பி லவ் கண்டி அணி நடப்புச் சம்பியனாக உள்ளது.

## இலங்கை – பப்புவா கால்பந்து அணிகள் மார்ச் 22இல் மோதல்

சர்வதேச கால்பந்து சம்மேளன கால்பந்து தொடரின் இலங்கை வலயத்தின் முக்கோண தொடரில் இலங்கை எதிர்வரும் மார்ச் 22 ஆம் திகதி பப்புவா நியுகினியை எதிர்கொள்ளவுள்ளது. இந்தப் போட்டி அன்றைய தினம் இரவு 8.45 மணிக்கு ரீட் மாவத்தை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை ஏற்று நடத்தும் இந்தத் தொடர் அன்றைய தினம் 3.30 க்கும் நடைபெறும் பூட்டான் மற்றும் மத்திய ஆபிரிக்க குடியரசுக்கு இடையிலான போட்டியுடன் ஆரம்பமாகிறது.

இரண்டு நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் இந்தத் தொடரில் மொத்தம் நான்கு போட்டிகளே உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதன்படி மார்ச் 25 ஆம் திகதி தொடரின் எஞ்சிய போட்டிகள் நடைபெறும். அன்றைய தினம் பிற்பகல் 3.30க்கு மத்திய ஆபிரிக்க குடியரசு மற்றும் பபுவா நியுகினி அணிகளுக்கு இடையிலான போட்டி நடைபெறும். அன்றைய தினம் இரவு 8.45 மணிக்கு இலங்கை மற்றும் பூட்டான் இடையில் நடைபெறும் போட்டியுடன் தொடர் நிறைவடையவுள்ளது.



உலகக் கிண்ண கால்பந்து (2026) தகுதிகாண் சுற்றின் ஆரம்ப சுற்றிலேயே தோல்வியுற்ற அணிகளுக்கு இடையில் சர்வதேச கால்பந்து சம்மேளனம் முதல் முறை அறிமுகம் செய்த தொடரின் கீழ் முதல் தொடராக இலங்கையில் இந்த போட்டிகள் நடைபெறவுள்ளன.

எவ்வாறாயினும் தொடரின் சம்பியன் அணி ஒன்று தேர்வு செய்யப்படுவதில்லை என்பதோடு பரிசளிப்பு நிகழ்வும் நடத்தப்படாது. எனினும் இதில் அதிக புள்ளிகளைப் பெறும் இரு அணிகளும் மற்றொரு தொடருக்காக பரிந்துரைக்கப்படுவதாக இலங்கை கால்பந்து சம்மேளனத் தலைவர் ஜஸ்வர் உமர் தெரிவித்தார்.

## சம்மாந்துறை பி. செயலக நிர்வாகக் கிளை சம்பியன்



கல்முனை மத்திய தினகரன் நிருபர்

சம்மாந்துறை பிரதேச செயலக நலன்புரி அமைப்பினால் வருடாந்தம் நடத்தப்படும் உள்ளக கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நிர்வாகக் கிளை வெற்றியீட்டியது.

உதவி பிரதேச செயலாளர் யு.எல். அஸ்லம் தலைமையில் சம்மாந்துறை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (13) நடைபெற்ற இந்தத் தொடரின் இறுதிப் போட்டியில் வெளிக்கள கிளையை எதிர்கொண்ட நிர்வாக கிளை 43 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

இச்சுற்றுபோட்டியில் இம்முறை 8 அணிகள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இம்ரானின் பிரதமர் வேட்பாளர் அறிவிப்பு



சிறை அனுபவித்து வரும் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், தனது கட்சியின் தலைவர்களில் ஒருவரான ஓமர் அயூப் கானை பிரதமர் வேட்பாளராக நிறுத்தியுள்ளார்.

கூட்டணி அரசு ஒன்றுக்கு இணக்கம் எட்டப்பட்டிருக்கும் தனது போட்டியாளர்களுக்கு எதிராக இம்ரான் கானின் வேட்பாளர் பாராளுமன்றத்தில் போட்டியிடவுள்ளார்.

கடந்த வாரம் நடந்த பொதுத் தேர்தலில் இம்ரான் கான் ஆதரவு சுயேச்சை வேட்பாளர்கள் அதிக ஆசனங்களை வென்றபோதும் ஆட்சி அமைப்பதற்கு போதுமான இடங்களை கைப்பற்றவில்லை.

இதனால் எதிர்வரும் பெப்ரவரி 29 ஆம் திகதி அரசொன்றை அமைப்பதில் இழுபறி நீடித்து வருகிறது. எனினும் பொதுத் தேர்தலில் இரண்டு மற்றும் மூன்றாம் இடங்களை பெற்ற முன்னாள் பிரதமர் நவாஸ் ஷரீப் மற்றும் முன்னாள் வெளியுறவு அமைச்சர் பிலாவல் பூட்டோ சர்தாரியின் கட்சிகள் இடையே ஆட்சி அமைப்பதற்கு இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

இதன்படி இந்தக் கூட்டணியின் பிரதமர் வேட்பாளருடன் இம்ரான் கானின் வேட்பாளர் போட்டியிட வேண்டி ஏற்பட்டுள்ளது.

காசா போரினால்

## ஊடகவியலாளர்கள் உயிரிழப்பு உச்சம்



கடந்த ஆண்டில் உலகெங்கும் கொல்லப்பட்ட 99 ஊடகவியலாளர்களில் 72 பேர் காசாவில் இஸ்ரேலிய போரில் செய்தி சேகரித்த பலஸ்தீனர்கள் என்பதோடு கடந்த 12 மாதங்களும் ஒரு தசாப்தத்தில் அதிக ஊடகவியலாளர் கொல்லப்பட்ட காலமாக இருந்தது என்று ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் குழு தெரிவித்துள்ளது.

காசா போரில் மரணங்கள் நிகழாதவரை ஆண்டுதோறும் கொல்லப்படும் ஊடகவியலாளர்கள் எண்ணிக்கை வீழ்ச்சி கண்டிருந்ததாக அந்தக் குழு நேற்று முன்தினம் வெளியிட்ட ஆண்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காசா போரில் மொத்தம் 77 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருப்பதோடு இதில் 72 பலஸ்தீனர்கள், மூன்று லெபனானியர் மற்றும் இரு இஸ்ரேலியர்கள் அடங்கும்.

உலகெங்கும் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களில் பலஸ்தீனர்கள் எண்ணிக்கை சுமார 75 வீதமாகும்.

“இந்தப் போர் எப்போதும் இல்லாத அளவுக்கு ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது” என்று ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் குழுவின் தலைவர் ஜோடி கின்பேர்க் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நியூயோர்க்கை தளமாகக் கொண்ட பத்திரிகை சுதந்திர அமைப்பு பெப்ரவரி 7ஆம் திகதி வெளியிட்ட அறிவிப்பில், காசா போரில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர் எண்ணிக்கை 85 ஆக அதிகரித்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## வலுவடைந்திருக்கும் இந்திய – ஆஸி. நட்பு

அவுஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு நட்புறவு வலுவான முறையில் காணப்படுவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகாரம், பாதுகாப்பு, வர்த்தகம், கல்வி, திறன் விருத்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கும் இருநாடுகளுக்கும் இடையிலான நட்புறவு விரிவடைந்து காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற சர்வதேச மாநாடொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர், இந்தியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் நிலவும் ஆழமான நட்புறவையும் எடுத்துக் கூறியுள்ளார்.

இம்மாநாட்டில் இந்திய வெளிவிவகார அமைச்சர், அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

# சர்வதேச செய்திகள்

## ரபா தாக்குதல் அச்சத்தால் காசா எல்லையில் எகிப்து தயார் நிலை

### இஸ்ரேலுக்கு தொடர்ந்தும் அழுத்தம்

தெற்கு காசாவின் ரபா நகர் மீது இஸ்ரேல் படை நடவடிக்கைக்கு தயாராகி வரும் நிலையில் அதற்கு எதிராக அமெரிக்கா மீண்டும் ஒரு முறை எச்சரித்திருப்பதோடு, அவ்வாறான படை நடவடிக்கை ஒன்றினால் வெளியேற்றப்படும் பலஸ்தீனர்களை ஏற்பதற்கு எகிப்து தயாராகி வருகிறது.

காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமாக 1.5 மில்லியன் பேர் எகிப்து எல்லையை ஒட்டி இருக்கும் சிறு நகரான ரபாவில் சிக்கியுள்ளனர். இந்த நகர் மீது வலுவான இராணுவ நடவடிக்கை ஒன்றை முன்னெடுக்கப்போவதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மீண்டும் ஒருமுறை வலியுறுத்தி இருந்தார்.

இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த வியாழனன்று (15) நெதன்யாகுவுடன் தொலைபேசியில் பேசியதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. இதன்போது பொதுமக்களை பாதுகாக்கும் திட்டம் ஒன்று இன்றி ரபா மீது தாக்குதல் நடத்த வேண்டாம் என்று பைடன் வலியுறுத்தியதாக வெள்ளை மாளிகை கூறியது.

பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக்கும் நெதன்யாகுவை தொலைபேசியில் அழைத்து, “காசாவுக்கு இராணுவம் நுழைந்தால் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ள மனிதாபிமான பேரழிவு பெரும் கவலை அளிக்கிறது” என்று குறிப்பிட்டதாக அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே ரபா மீது தாக்குதலை தொடுக்க வேண்டாம் என இஸ்ரேலை வலிறுயுத்தி பிரிட்டன், அவுஸ்திரேலியா, கனடா மற்றும் நியூசிலாந்து கூட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தன.

“நாங்கள் காசா நகரில் இருந்து தெற்குக்கு இடம் பெயர்ந்தோம்” என்று கூறிய அஹ்லம் அபூ அஸ்ஸி, “(பின்னர்) ரபாவுக்குச் செல்லும்படி அவர்கள் எமக்குக் கூறினார்கள், எனவே நாம் ரபா சென்றோம்.

போவதும் வருவதுமாக எம்மால் இருக்க முடியாது. இங்கு எமக்கு பாதுகாப்பான எந்த இடமும் இல்லை” என்று ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

#### தயாராகும் எகிப்து

இதேநேரம் ரபாவில் இஸ்ரேலிய தாக்குதலால் வெளியேறும் பலஸ்தீன அகதிகளை ஏற்கும் வகையில் எகிப்து எல்லையில் பாதுகாப்பு வலயம் ஒன்றை உருவாக்கி வருவதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

எனினும் அவ்வாறான தயார்படுத்தல்கள் பற்றிய செய்தியை மறுக்கும் எகிப்து காசாவில் இஸ்ரேலின் பேரழிவு நடவடிக்கைகளால் பலஸ்தீனர்கள் எகிப்தின் சினாய் பகுதிக்குள் நுழையும் வாய்ப்பு பற்றி தொடர்ந்து எச்சரித்து வருகிறது. இதனை எகிப்து முற்றாக நிராகரித்து வருவதோடு ஜோர்தான் போன்ற அரபு நாடுகளும் இதனை எதிரொலிக்கின்றன.

பலஸ்தீனர்களை காசாவுக்கு வெளியில் இடம்பெயரச் செய்வதை அமெரிக்காவும் தொடர்ந்து எதிர்த்து வருகிறது. இவ்வாறான நெருக்கடிச் சூழலை தவிர்ப்பதற்கு போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த எகிப்து தீவிரமாக ஈடுபட்டு வருவதாக செய்திகள் கூறுகின்றன. இந்நிலையில் எகிப்து எல்லையில் அது தற்காலிகமான முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை செய்து வருவதாக கூறப்படுகிறது.

எகிப்து பாலைவனப் பகுதியில் அடைக்கலம் பெறும் பலஸ்தீனர்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்கும் ஏற்பாடுகளை தயாரித்து வருவதாக அது தொடர்பில் அறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

மனித உரிமைகளுக்கான சினாய் அறக்கட்டளை உள்ளூர் ஒப்பந்ததர்களுடன் பேசியிருப்பதோடு, சினாய் தீபகற்பத்தில் ஏழு மீற்றர் உயரமான சுவர்களை சூழ இந்த வசதி உருவாக்கப்படுவதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

1948 இல் இஸ்ரேல் உருவாக்கப்பட்டபோது சுமார் 700,0000 பலஸ்தீனர்கள் வெளியேற்றப்பட்ட மற்றொரு நக்பா அல்லது பேரழிவை எகிப்து நிராகரித்து வருகிறது.

எனினும் காசாவில் உள்ள மக்களை பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்றுவது என்பது வெறும் மாயை என்று குறிப்பிட்ட ஐ.நா உதவித் தலைவர் மார்டின் கிரிபித்ஸ் ரபா மீது இஸ்ரேல் தாக்குதலைத் தொடுத்தால் பலஸ்தீனர்கள் எகிப்துக்குள் நுழைய சாத்தியம் உள்ளது என்று எச்சரித்தார்.

இதனை அவர் எகிப்தின் கெட்ட கனவு என்றும் விபரித்திருந்தார்.



#### மருத்துவமனை சுற்றிவளைப்பு

தெற்கு காசாவில் உள்ள மிகப்பெரிய மருத்துவமனையான அல் நாசர் மருத்துவனையில் கடந்த வியாழக்கிழமை ஊடுருவிய இஸ்ரேலிய துருப்புகள் நேற்று அங்கு தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டது. இந்த மருத்துவமனையின் மகப்பேற்று பிரிவுக்குள் இஸ்ரேலியப் படைகள் நேற்று நுழைந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேலிய ஊடுருவலால் மின்சாரம் துண்டிக்கப்பட்டு ஒட்சிசன் விநியோகமும் மட்டுப்படுத்தப்பட்ட சூழலில் இதுவரை நான்கு நோயாளர்கள் உயிரிழந்ததாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்தது. இந்த மருத்துவமனைக்குள் பணயக்கைதிகளை வைத்திருப்பதாக குறிப்பிட்டிருக்கும் இஸ்ரேலிய இராணுவம் அவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டிருப்பதாக கூறியுள்ளது. இந்த மருத்துவமனையைச் சூழ ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் படைகள் இடையே அண்மைய நாட்களில் உக்கிர மோதல் இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.



நோயாளிகள் உட்பட இந்த மருத்துவ வளாகத்தில் தஞ்சம் புகுந்த ஆயிரக்கணக்கான மக்கள் அண்மைய நாட்களில் வெளியேற்றப்பட்டிருப்பதாக ஹமாஸ் ஆட்சியில் உள்ள காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

காசாவின் ஏனைய பகுதிகளிலும் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

ரபா நகரின் கிழக்கில் உள்ள நசிர் பகுதியில் வீடு ஒன்றின் மீது கடந்த வியாழக்கிழமை இரவு இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் குறைந்தது 11 பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேலின் தாக்குதல்களில் காசாவில் மேலும் 112 பேர் கொல்லப்பட்டு 157 பேர் காயமடைந்ததாக காசா சுகாதார அமைச்சு கூறியது.

இதன்படி கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் காசா மீதான சரமாரித் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணக்கை 28,775 ஆக அதிகரித்துள்ளது. மேலும் 68,552 பேர் காயமடைந்திருப்பதாக சுகாதார அமைச்சு கூறியது.

காசாவில் தொடர்ந்து பலஸ்தீன போராளிகளின் எதிர்ப்பை சந்தித்து வரும் இஸ்ரேலிய படையின் மற்றொரு வீரர் கொல்லப்பட்டிருப்பதை இஸ்ரேல் இராணுவம் உறுதி செய்துள்ளது. தெற்கு காசாவில் இடம்பெற்ற மோதலில் இருபது வயதான வீரர் ஒருவரே கொல்லப்பட்டுள்ளார்.

இதன்படி காசாவில் இஸ்ரேல் தரைவழி படை நடவடிக்கையை ஆரம்பித்தது தொடக்கம் கொல்லப்பட்ட இஸ்ரேலிய துருப்புகளின் எண்ணிக்கை 234 ஆக அதிகரித்திருப்பதோடு 1361 வீரர்கள் காயமடைந்திருப்பதாக அந்த இராணுவம் கூறியது.

#### போர் நிறுத்தப் பேச்சு

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவது, பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான கைதிகள் பரிமாற்ற உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவதற்கு எகிப்து தலைநகர் கெய்ரோவில் அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்து மத்தியஸ்தர்கள் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏவின் பணிப்பாளர் பில் பர்ன் முன்னறிவித்தல் இன்றி நேற்று முன்தினம் இஸ்ரேலை சென்றடைந்தோடு அங்கு அவர் இஸ்ரேல் பிரதமர் மற்றும் இஸ்ரேலிய உளவுப் பிரிவுத் தலைவர் டேவிட் பர்னியை சந்தித்து பேச திட்டமிட்டிருந்தார்.

சி.ஐ.ஏ. தலைவர் ஏற்கனவே மொசாட் தலைவர் மற்றும் எகிப்து, கட்டார் பிரதிநிதிகளுடன் கெய்ரோவில் பேச்சுவார்த்தை நடத்தி இருந்தார். செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தப் பேச்சுவார்த்தையை தொடர்ந்து ஹமாஸ் தூதுக் குழு ஒன்று கடந்த புதன்கிழமை கெய்ரோவை சென்றடைந்தது.

இந்நிலையில் உடன்பாடு ஒன்றை எட்டுவதற்கான சாத்தியம் இன்னும் இருப்பதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டோனியோ பிளிங்கன் குறிப்பிட்டுள்ளார். “அதில் நாம் தீவிர கவனம் செலுத்தி இருப்பதோடு அது சாத்தியமானது என்று நான் நம்புகிறேன்” என்று அல்பேனியா சென்றிருக்கும் பிளிங்கன் கூறினார்.

இதேவேளை சர்வதேச அங்கீகாரம் பெற்ற பலஸ்தீன நாடு ஒன்றை நிராகரிப்பதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

காசா போர் பிராந்தியம் எங்கும் பதற்றத்தை ஏற்படுத்தி இருக்கும் சூழலில் இஸ்ரேலுக்கு எதிராக லெபனான், பாதுகாப்புச் சபையில் முறையிட்டுள்ளது. இஸ்ரேல் பொதுமக்கள் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியதற்கு எதிராகவே அது முறையிட்டுள்ளது.

தெற்கு லெபனானில் கடந்த புதன்கிழமை இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் குறைந்து 10 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதில் சிறுவர்கள் மற்றும் பெண்களும் அடங்குகின்றனர்.

காசா போர் வெடித்தது தொடக்கம் லெபனான் ஹிஸ்புல்லா மற்றும் இஸ்ரேலிய இராணுவத்திற்கு இடையே பரஸ்பரம் மோதல் நீடித்து வரும் சூழலில் இஸ்ரேல் நடத்திய உயிர்ச்சேதம் மிக்க தாக்குதலாக இது இருந்தது.

“தமது வீடுகளில் பாதுகாப்பாக இருக்கும் பொதுமக்கள் மீது இஸ்ரேல் வேண்டுமென்று மற்றும் நேரடியாக நடத்திய தாக்குதல் சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மீறுவதோடு ஒரு போர் குற்றமாகும்” என்று லெபனான் வெளியுறவு அமைச்சு குறிப்பிட்டது.